1412

Regd. No. M. 373.

6 - MAR 1924

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion

Science, Art and Civilization.

தொகுதி 8	1918-௵ பிப்பிரவரி௴ பிங்கள௵ மாசி௴	பகுதி 10

அ. ரங்கசாமி ஐயர், B.A., B.L., F.T.S., பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷ சந்தா இந்தியாவுக்கு ரூ 2.

அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4.

தபால் சார்ஜ் வேறு

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

விஷய அட்டவணை.
(CONTENTS.)

பக்கம்

1. நேயர்களுக்கு அறிவிப்பு — பத்திராதிபர் — 361
Request to Contributors — Editor

2. தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ. — 361
Current Events—R. Rangaswami Iyer, B. A.

3. பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்.)—வி. வெங்குசாமி ஐயர் — 369
Elements of Theosophy—V. Venkusami Iyer

4. பிரபத்திவித்யை—வி. கே. தேசிகாசாரியார் — 374
Prapathi—V. K. Desikacharri

5. சுதேசக்கல்வி—ஆர். ரெங்காச்சாரியார் — 381
National Education—R. Rangacharri—M. A L. T

6. ஸர். ஜகதீச சந்திர ஸை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் — 386
Sir J. C Bose's Research Institute—R. Rangaswamier

7. ஜகத்குரு — 396
Jagadguru

8. உதயதிசை நக்ஷத்திர சங்கத்தின் கொள்கைகள்—இ. வி. நாராயண பாகவதர் — 398
The creed of the order of the Star in the East Verses—E. V Narayana Bhagavatar

9. புத்தகவிமர்சம் — 373, 380
Review of Books

10. சமாசாரக் குறிப்பு — 399
Events

அணா 6 விலை] **மீனாட்சி சுந்தரம்** [தபால் கூலி வேறு

ஒரு இனிய நவீன நாடகம் பிராமணகுடும்ப சம்பவங்களை மிக அழகாய் நாடகரூபத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆக்கியோர் கி. வெங்கடராமையர். மிகவும் அழகாய் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

செந்தமிழ், விவேகோதயம், தேசபக்தன், கல்வி முதலிய பத்திரிகைகளில் நன்குமதிக்கப்பெற்றது.

பூர்ணசந்திரோதயத்தில 8ம்தொகுதி 103 ஆம் பக்கம் பார்க்க. எமக்கெழுதிப்பெறுக. ஒருசமயம் 6 அல்லது அதிகப் பிரதிகள் வாங்குவோர்க்கு 100க்கு 15 கமிஷன் கொடுக்கப்படும்.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

பாலாஜி அண்டு கம்பேனி காசி.

சகாயமாகவும் நவீனமாதிரிகளில் பட்டாடை விரும்புகிறவர்கள் காசியில் பிரபல பட்டு வர்த்தகர்களாகிய பலாஜி அண்டு கம்பெனிக்கு எழுத மறந்துவிடாதீர்கள். எங்கள் பட்டாடைகளின் உயர்வுக்கும் நேர்த்திக்கும் பகிரங்கப் பொருள் காட்சிகளில் தங்கப்பதக்கம் பரிசளிக்கப் பெற்றிருக்கிறோம். பட்டுப் புடவைகள் துப்பட்டாக்கள் வெண்பட்டு அங்கவஸ்திரங்கள் முதலிய புதுமாதிரியான தினுசுகள் தயாரில் சித்தமாக யிருக்கின்றன. சிறு ஆர்டர் செய்து தருவித்துப்பார்த்தால், விலைகளின் நோட்டமும், சரக்குகளின் பெருமையும் தெரிந்து கெள்வீர்கள்.

விளையாட்டுப்பாத்திரம் 32-விதமான சாமான்கள் அடங்கியது குழந்தைகளை மகிழ்விப்பதில் மிக்க பெயர்பெற்றது.

பெரியசயிஸ்செட் 1-க்கு ரூ 3—8—0	குங்குமப்பூ முதல் தரம் தோலா 1-க்கு ரூ 2-8-0
மத்தியசயிஸ்செட் 1-க்கு ரூ 2—0—0	காபூல் பால் காயம் 12-தோலா கொண்ட டப்பி 1-க்கு ரூ 1—0—0
சிறுசயிஸ்செட் 1-க்கு ரூ 1—8—0	
முதல்தரமான கஸ்தூரி 1 ரூ இடை கொண்ட தோலா 1-க்கு ரூ 40-0-0	விலை விபர காட்லாக் இனாம்.

மானேஜர்

கே. எ. கோபாலய்யர்

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம்

Balajee & Co., Benares City U. P.

இதுசமயம் தவருதீர்கள்

ஒவ்வொருவரும் அதிர்ஷ்டத்தையும் சம்பவங்களையும் நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டியதவசியம்.

இது பார்த்ததும் ஜாதகத்தையாவது, அல்லது ஜனன வருஷம், மாதம், தேதி, நாழிகை இவைகளை அனுப்பியாவது, அதுவும் முடியாவிடின் தனக்கு வேண்டிய கேள்விகள் எதுவோ அதைமட்டும் எழுதி யனுப்பினாலும் சரி, இன்னவிதமான பலன் உண்டாகுமென்று ஷண்முகநாதன் கிருபையால் உடனே தெரிந்து பதிலனுப்பலாகும்.

1. ஆயுட்பாகம், 2. களத்திரபாகம், 3. கல்யாணம் பந்துக்களிலா, அன்னியத்திலா, 4. சந்ததியுண்டா இல்லையா, 5. எந்தவிதத்தில் தனம் கிடைக்கும், 6. தனம் மிஞ்சுமா, 7. சொந்த வீடு நிலம் கிடைக்குமா, 8. கடன் நிவர்த்தியாகுங்காலம், 9. விவகாரம் ஜெயமாகுமா, 10. நினைத்தகாரியம் கைகூடுமா. 11. தம்பதிகளில் யார் முன் பின் காலஞ்செல்வார்கள், 12. காலஞ்செல்வது சுய தேசமா அன்னியதேசமா, மேலேகண்ட 12-கேள்விகளுக்கும் ரூ 5. கேள்வி 1-க்கு ரூ ஒன்று. 12ம்-ம் விரும்புவோர் ரூ 3 முன் பணமனுப்பி, பாககியை வி. பி.யில் பெறலாகும்.

விலாசம்:—

K. V. கோவிந்தசாமி நாயுடு.

ஜோஸ்யம், வைத்யம், வளவிக்காரத்தெரு. மேலச்சித்திரை

(ஷண்முகநாதன்றுணை) வீதி மதுரை

மதுரை பிரஹ்மக்ஞான சபை பிரசுரங்கள்

(12) "ஹிந்துஎன்பவன் எவன்?:-(ப. நாராயண ஐயர்) இது அழகான ஓர் விமர்சம். இதைப் படிப்போர் யாவர்க்கும் துவேஷ புத்தியென்பது நீங்கும். ஒற்றுமையுணர் வேற்படும். உண்மையான ஹிந்துவாக எப்படி ஒழுகுவது என்று ஒவ்வொருவரும் அறிய வேண்டுவோராகில் இதைப் படித்தல் நலம். இதன் விலை அணா ஒன்று.

(13) மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையார் சரித்திரம்:- (ப நாராயண ஐயர்) இது அம்மையாரவர்களுடைய படத்துடன் அழகாய் அமைந்துளது. நமது அம்மையாரைப் பற்றியறியாதவர் இல்லையாயினும், அம்மையாரிடத்து கண்ணுக்குக் கண்ணாயிருந்த ஓர் சிஷ்யர் எழுதியுள்ளமையால் அருமை வாய்ந்தது. இதன் விலை அணா 1.

(14) அன்னிபெஸண்ட் அம்மையார் சரித்திரம்:- செய்யுள் நடையில், பால சரஸ்வதி கிருஷ்ணமாசார்யர் அவர்களால் நயமான கற்பனைகளோடு அம்மையார் சரித்திரத்திற் பிரதான அம்சங்கள் பல எடுத்து உரைக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 1.

(15) காயத்ரீ ராமாயணம் (பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்) மேற் கூறிய காயத்ரீ மந்த்ரம் 24 அக்ஷரங்களையுடையது. இவைகளை முத யெழுத்தாய்க் கொண்ட விருபத்து நான்கு சுலோகங்கள் இராமாயணத்தில் மொத்தம் இருபத்தினாலாயிரம் சுலோகங்களுள் ஆயிரம் சுலோகத்திற்கு அடுத்தடுத்து அமைக்கப் பட்டுள்ளது. இவ்விருபத்துநான்கு சுலோகங்களையும் தனியே யெடுத்து, அவைகட்கு அத்யாத்ம விஷயமான அர்த்தத்தையும் ராமாயணகதைக்குறிய அர்த்தத்தையும் தனித்தனியே இப்புத்தகம் விளக்கிக் கூறுவதாகும். சமஸ்கிருத மூலமும் தமிழ்மொழி பெயர்ப்பும் இதிலடங்கியுள்ளன. இதன் விலை அணா 1.

(16) எண்ணங்களின் ரஹஸ்யம் (ப. நாராயண ஐயர்:–) நாம் நினைக்கும் எண்ணங்களின் சொரூபம் எப்படியுள்ளது? அவைகளின் பயன் என்ன நாம் எவ்வாறு அவற்றை நேர்மையாய் கையாளுவது? என்று பலவாராக இது விவரிக்கப்பெற்றிருக்கிறது. எண்ணங்களின் உருவப் படங்களும் இரண்டு உள்ளன. இதன் விலை அணா 1.

(17) பகவான் புத்தரின் சரித்திரம் (ப. நாராயண ஐயர்) ஆசியாக் கண்டத்து ஞான தீபமான இவர் சரித்திரம் நம்மவர் ஒவ்வொருவரும் அவசியம் படித்துணரவேண்டும். இதன் விலை 6 பை.

(18) லோக குருவின் அவதாரங்கள்:— (ப. நாராயண ஐயர்) லோககுரு வென்பார் யார்? இவர் வேலை என்ன? உண்மையில் இவர் உலக முழுமைக்கும் குருதானா? உலகமுழுமையையும் எவ்விதம் படிப்பித்து நடத்துகிறார்? என்பனவற்றைத் தெளிவாகக் கூறுகிறது. இதன் விலை அணா1.

(19) லோக குருவாகிய பரமன் வருவானேன்? லோககுருவானவர் சமீபகாலத்தில் உலகத்தில் வந்துலாவுவாரா? அப்படி வரவேண்டியதற்கு தற்காலத்தில் என்ன அவசியம் நேர்ந்திருக்கிறது? காரணங்கள் என்னென்ன? என்பன நன்று விவரிக்கப் பட்டிருக்கிறது. இதன் விலை அணா ஒன்று.

(20) ஸ்ரீஹெலினம் பாளம்மையார் சரித்திரம்:—(ப. நாராயணஐயர்) தியசாபிகல்சொசைட்டி என்று சொல்லப்படும் பிரஹ்மக் ஞான சபையை இத்தூல உலகில் காரண பூதர்களாயிருந்து ஸ்தாபித்த ஒருவரும் மஹான்களின் சிஷ்யையுமான பிளவாட்ஸகி அம்மையார் சரித்திரம் இதன் விலை 6 பை

(21) மஹாலய பக்ஷமும் நவராத்திரியும்:—(ப. நாராயண ஐயர்) இவ்விரண்டு பர்வகாலங்களும் இந்துக்கள் எல்லோராலும் விசேஷமாகக் கொண்டாடப்படுகிற போதிலும் அவற்றின் காரணங்களும் நியாயங்களும் என்னவென்பது சிலருக்கே தெரியும். இதன் விலை அணா 1.

(22) மோனம் என்பது ஞானவரம்பு:— (ப. நாராயண ஐயர்) மேற்கண்ட பழமொழி இப்பத்திரிகையில் உண்மையான அர்த்தத்தோடு விளக்கப்பட்டிருக்கிறது இதன் விலை 6 பை

(23) பிரஹமக்ஞானமும் பிரஹமக்ஞான சபையும்:— பிரஹ்மக்ஞானம் என்பதென்ன? பிரஹ்மக்ஞான சபையின் நோக்கங்களென்ன? அதில் யார் யார்? சேரலாம் பிரஹ்மக்ஞானகிளைச்சபை

யை நடத்துவதெப்படி? மீட்டிங்குகளை நடத்துவதெப்படி? என்னும் இவ்விவரங்களடங்கியன. இதன் விலை 6 பை.

(24) நக்ஷத்திரம் பிரகாசிக்கிறது! லோகதுரு வருகிறார்! பரமாச்சார்யார் வருகிருர்! ஜகத்குரு வருகிருர்!

என்று பயிரங்கப் படுத்துங்கள். உதயதிசை நக்ஷத்திர சங்கத்தார் இதைஅழகாய் காரண காரியங்களுடன் எடுத்துரைக்கிருர்கள். அதன் மூலமாய் ஜனங்கள் எல்லோருக்கும் எம்மதத்தாருக்கும் எச்ஜாதியாருக்கும் நிஜபக்தியை ஊட்டுகின்றனர் இதுமிகவும் முக்கியம் இத்தருணம் இதுவிஷயமாய் உழைக்கத் தவருதீர்கள் பெரும்பாக்கியம் எவரும் உழைக்கலாம்.

உதயதிசை நக்ஷத்திரசங்கம், நக்ஷத்திர தூதர்களின்சங்கம் இவ்விரண்டைப்பற்றிய விவரங்களும் "லோக குருக்கள்" அவதரிப்பதைப்பற்றிய இரகசியங்களும் அடங்கிய துண்டுப்பத்திரிகைகள் எமது வசம் தயாராயுள்ளன. பின் வரும் விலாசத்திற்கு காலணு அனுப்புக. வகைக்குப் பத்துவீதம் ஐந்துவகைக்கு ஐம்பது துண்டுப் பத்திரிகைகள் தங்களுக்கனுப்பப்படும். தாங்களும் வாசித்து வேறு பத்து நண்பர்களுக்கும் பத்திரிகைகளைக் கொடுத்து இந்நற்செய்தியைப் பரப்பி "சேரவாரும் ஜெகத்தீரே" என்று பெரியோர்கள் கூறியபடி கூவுங்கள். இதுவே உண்மைப் பக்தி.

(25) டில்லிமாநகரில் மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியவர்களின் பட்டாபிஷேகம்:--நமது ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் படமும், மேரி மஹாராணியாருடைய படமும்அடங்கியன. இரண்டு அழகான அகவல்களும் காலஞ்சென்ற ப. நாராயண ஐயரவர்கள் வசன நடையில் எழுதியதும், இதன் விலை அணு 1.

(26) அன்பு அதன் உண்மை.— இது நாராயண ஐயரவர்களால்) எழுதப்பட்டது. இதில் அன்பின் உண்மையான சொரூபம் சாஸ்திர முறையாக தமிழ் ஸமஸ்கிருத மேற்கோள்களுடன் யுக்திையிலாகவும் நன்று நிரூபிக்கப்பட்டுளது. இதன் விலை 1½ அணு.

(27) ஜாதி யோக்யதை:- ஸ்ரீ பெஸண்டு அம்மையார் நங்காட்டு ஆசாரச் சீர்திருத்தத்தினிமித்தம் திவான்பஹதூர் யல். எ. கோவிந்தராகவ ஐய்யரவர்களின் அக்ராசனத்தின் கீழ் ஓர் அரிய பிரசங்கம் செய்தார். அதன் தமிழ் மொழி பெயர்ப்பு விலை அணு 3.

(28) யக்ஞம்,—இதன் உண்மை நன்கு விளக்கப்பெற்றுளது. இதன விலை அணு 1.

(29) ஸ்ரீமத் சங்கராசார்ய சுவாமிகளின் சரித்திரம்:—உலக முழுமையிலும் இணையற்ற இவருடைய சரித்திரம் வெகு அழகாயும் சுருக்கமாயும் வரயப்பட்டுளது. இதன் விலை பை 6

(29) தேவாலயம்:—இதன் இரகஸியமான அர்த்தம் இதில் விவரிக்கப்பட்டுளது. இதன் தற்கால நிலையும், இதன் சீர்திருத்தமும் இதில் வரையப்பட்டுள்ளன. கிராமத்தார்கட்கு மிகவும் முக்யமானது. எப்படிததம் கோவில்களை நிஜமான அருட் கோவிலாகக் செய்து கொள்ளலாமென்பது நன்கு விளங்கும். இதன் விலை பை 6

பிரஹ்மக்ஞான சபை, மதுரை.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 8	1918-ஞு பிப்பிரவரி மீ பிங்களஞு மாசி மீ	பகுதி 10

நேயர்களுக்கு அறிவிப்பு.

நமது பூர்ணசந்திரோதயமானது யாவருக்கும் உபயோகமாகும்படி ஞானவுணவை ஈந்துவருவது கடமையாகலாலும், பெரியோருக்குதவும் உண்டி சிறுவர்கள் உட்கொள்ளத் தக்கதாயிராததாகலாலும், சிறுவர்கள் தாம் இனி வருங்காலத்தில் நம் நாட்டை முன்னேற்றமடைவிக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறார்கள் ஆகையாலும், சிறுவர்கள் எளிதில் அறியும்படி சம்பாஷணை ரூபமாகவும், கதை ரூபமாகவும், நம்முடைய சமய வுண்மைகளையும், சரித்திர வுண்மைகளையும், ஏனைய தத்துவங்களையும் எமக்கு எழுதியனுப்பினால் நாம் சிறுவர் பக்கமென்ற பகுதியில் பிரசுரிக்கலாகும். கட்டுரைகளும், சம்பாஷணைகளும், இரண்டு பக்கத்துக்கு மேற்போகாமல் இருத்தல் வேண்டும்.

பத்திராதிபர்,

தற்கால நிலைமை.

சென்ற ஜனவரிமீ 27-ஆம் தேதி ஸ்ரீரங்கத்தில் பாரதீய ஸ்ரீ வைஷ்ணவ ஸபாவின் முதலாவது வருஷோற்சவம் கூடிற்று. கன ஸ்ரீ ஹைகோர்ட்டு வக்கீல் டி. ரங்காச்சாரியார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். இம்மஹா சபையின் வரலாற்றில் எம்முடைய மனதுக்கு மிகவும் சந்தோஷகரமாக விருப்பது யாதெனில் தென்கலையாரும் வடகலையாரும், ஒருங்கு சேர்ந்து உபந்யாசங்கள் செய்து தீர்மானங்கள் கொண்டது தான். இரு கலையாருக்குள் உள்ள வித்தியாசங்கள் மிகவும் சொற்பமானவை, ஒற்றுமையான விஷயங்கள் பெரும்பான்மையானவை. உலகத்தை யெல்லாம் அபிமானித்து ஒருங்கு சேர்த்து உய்விக்கவேண்டுமென்ற பேரவாக் கொண்ட ஸ்ரீ ராமாநுஜ சுவாமிகள் பின் ஒரு காலத்தில் தம் சிஷ்யர்கள் அற்ப வித்தியாசங்களைக் கொண்டு ஒருவருக்கொருவர் மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டுக்களிலும், ஸிவில் கோர்ட்டுகளிலும் சீர்குலைந்து கிடப்பார்கள், என்று கேட்டிருப்பாராயின் நம்பியிருக்க மாட்டார் அப்படி நம்பினாலும் எவ்வளவு வருத்தப்படமாட்டார்கள். இவ்வுணர்ச்சியை கொஞ்சம் கொள்வார்களானால் தென்கலையாரும், வடகலையாரும் ஒருவரையொருவர் மிகவும் அளவளாவியிருப்பார்கள். ஆனால் அகங்கார, மமகாரமேலீட்டாலும், சொற்ப ஊதியத்தில் கொண்ட ஆசையாலும இச்சண்டைகள் நிகழ்ந்து வந்தன. ஆனால் அகங்கார மமகாரங்களில்லையென்றால் உலகத்தில் தான் சண்டையேது? சச்சரவேது? ஆகையால் இவ்வைஷ்ணவ சபையில் கொண்ட தீர்மானப்படிக்கு இனி இருகலையாரும் ஒற்றுமையாக வாழ்வார்கள் என்று நம்புகிறோம். சட்ட புஸ்தகங்களில் இவர்கள் பேர்கள் துலங்குவதினும், வைஷ்ணவ சம்பிரதாயங்களை நாடெங்கும் பரவச் செய்வதில் மிகவும் ஊக்கமெடுத்துக்கொண்டார்கள், அதனால் நாடுயர்ந்து நலனுற்றது, என்று சரித்திரப் புத்தகங்களில் வரையப்படுவது எவ்வளவு மேன்மை!

* * *

சென்னைச் சர்வகலாசாலையில் இவ்வருஷம் சர்வகலாசாலை யுபந்யாசகராக பி. ஸி. ரே என்ற சிறந்த ரஸாயன

சாஸ்திரியவர்களை நியமித்தார்கள். அவர் பொதுஜனங்களுக்கு உபயோகமாகும்படி சென்னையில் பல உபந்யாசங்கள் செய்தார்கள். இவருடைய கியாதி உலகெங்கும் பரவியது. இவருடைய அனேக சிஷ்யர்கள் தங்களுடைய அரிய ஆராய்ச்சிகளால் தங்களுக்குக்கியாதியையும், இந்தியாவுக்குப் பெருமையையும் தம் ஆசாரியருக்கு பிரக்கியாதியையும் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்பெரியாருடைய ரஸாயன சரித்திர ஆராய்ச்சியானது மிகவும்போற்றத்தகுந்தது. ரஸாயன சாஸ்திரவிஷயமாய் இந்தியாவில் உள்ள புராதன கிரந்தங்களையும், இந்தியாவிலிருந்து திபெத்துக்குப்போன கிரந்தங்களையும் பன்னிரண்டு வருஷகாலமாய்ச் சேகரித்துவந்தார். ஆகையால் இந்தியாவில் வெகுகாலத்துக்கு முன்னரே மிகவும் ஆச்சரியமான ரஸாயன சாஸ்திரஞானமிருந்தது என்னும், இந்தியாவிலிருந்து அரேபியர் முதலியவர்களுக்கும், அவர்கள் மூலம் மேல்நாட்டுக்கும் அறிவு பரவிற்றென்றும், யாவரும் அங்கீகரிக்கும்படி இவர் நிரூபித்திருக்கிறார். இவர் புத்தகம் வெளிவரும் முன் சில ஐரோப்பியர், முக்கியமாய் பர்னெல் என்பவர், அரேபியரிடமிருந்து இந்தியர் ரஸாயன சாஸ்திரத்தை கற்றனர் என்று பிதற்றினார்கள். இந்தியாவின் மேன்மையை ஒத்துக்கொள்வது அவ்வளவு சிரமமாயிருந்தது போலும்!

***

2,500 வருஷங்களுக்குமுன் தக்ஷசைலம் என்ற நகரத்திலிருந்த சர்வகலாசாலையில் மிகவும் உயர்வான ஆயுர்வேத சாஸ்திரங்கள் கற்பிக்கப்பட்டதாயும், அதில் ஒரு பிறிவான கௌமார பிருத்யம் என்ற குழந்தை வைத்தியம் மட்டும் ஒரு சில மாணாக்கர் கற்றுவந்ததாயும், அவர்களில் ஒருவரான ஜீவகர் என்றவர் மகதராஜ்யத்தில் சக்கரவர்த்தியாயிருந்த பிம்பிஸாரரிடம் அரண்மனை வைத்தியனாயிருந்ததாயும் சரித்திரம் கூறுகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு வெகு காலத்துக்கு முன்னரே குழந்தை வைத்தியத்திலேயே தனியாய்ப்பாண்டித்தியமும் விசேஷமும் வாய்ந்த பண்டிதர்களிருந்தார்களானால் அவர்களுடைய மரபில் தோன்றினநாம் கொஞ்சமும் எவர் முன்னும் தலைகவிழ அவசியமில்லை.

இன்னும் இவ்விதமாக ஸ்ரீமன் பி. வி. ரே என்பர்வ
செய்த அரிய உபந்யாஸங்கள் சென்னை மாணாக்கர்களை
யும் பெரியவர்களையும் மகிழ்வெய்தும்படி செய்தன.
ஆனால் முக்காலத்தில் நாம் அடைந்திருந்த பெருமையால்
உள்ளம் பூரிப்பது போதாது. ஆனால் முற்காலத்திலடைந்
திருந்த நம்முடைய தேர்ச்சிக்கு ஏற்ப, அதைவிட மிகுந்த
முயற்சிகளை யிக்காலத்திலும் செய்து நம் நாட்டின் பெரு
மையையும் பொருட் செல்வத்தையும் ஓங்கும்படி செய்ய
வேண்டுமென்றும்கூறினர். உதாரணமாக, தம்மாணாக்கருள்
ஒருவர் நெருப்பு அவிக்கும் புதிய கருவியை இவ்வியுத்த
ஆரம்பத்துக்குப்பின்சிலமாதங்களுக்குமுன் நிர்மாணஞ்செய்
திருந்ததாயும்முதன்முதல் 1000கருவிகளை பட்டாளத்துக்
காக அரசாங்கத்தார் பெற்று அதன் மேன்மையை அறிந்து,
மறுபடி 2000மும் மறுபடி 2000மும் செய்து தரும்படி உத்
திரவு கொடுத்திருப்பதாயும், இதனால் இச்சிஷ்யன் பெரும்
பொருளிலாபத்தைப்பெற்றிருக்கிறார் என்றும், சொன்னார்.
மேலும் மதராஸிலிருக்கும் வாலிபர்கள் புத்திசாலித்தனத்
திலாவது, ஊக்கத்திலாவது, தேச பத்தியிலாவது வங்கா
ளிகளைவிடக் குறைந்தவர்களில்லையாகையால் இங்கும் ரஸா
யன சாஸ்திர ஆராய்ச்சிச்சாலைகள் ஸ்தாபித்து அவைக
ளில் முயன்றால் சென்னை மாகாணமும் உயர்வடையும் என்
று கூறினர்.

*
* *

தற்போதிருக்கும் கிளர்ச்சி காரணமாக, இந்திய சர்வ
கலாசாலைகளில் உபந்யாசகராக அநேக இந்தியர்களை நிய
மித்திருப்பது மனதுக்குச் சந்தோஷத்தை யுண்டுபண்ணுகி
றது. இவ்வாறே மைசூர் சர்வ கலாசாலையிலும் பஞ்சாப்
சர்வ கலாசாலையிலும் சென்னையிலும் இந்தியர்களை நியமி
த்திருக்கிறார்கள். இந்தியர்களில அவ்வுத்தரவாதமான
வேலைகளை நிர்வகிக்கத்தக்கவர்கள் கிடையாது என்ற மிக்
கையானது வெளிச்சத்தின் முன் நில்லாவிருள்போல் பறந்
துவிட்டது. இந்தியர்கள் செய்யும் பிரசங்கமானது எவ்

ளவு ஊக்கத்தைத்தருமோ அவ்வளவு ஊக்கத்தை மேனுட்டார், எவ்வளவு மேதாவிகளாயிருந்தாலும், செய்யும் பிரசங்கமானது எவ்வாறுசெய்யும்? தவிர அவர்களுக்கு எவ்வளவு அதிகச்சம்பளம் கொடுக்கவேணும்! கப்பல் சேள்விகள் செலவுகள் எல்லாம் அதிகமல்லவா? மேலும் ஸ்ரீமான் ரே அவர்கள் தம்முடைய சம்பளம் முழுவதையும் பொதுப்பிரயோஜனத்திற்காக தத்தம செய்திருக்கிறூரே. அங்ஙனம் அன்னியர் செய்வாரா?

*
* *

ஆகையால்தான் ஒவ்வொரு நாட்டிலும் தேசியக்கல்விதான் நடைபெறவேண்டும் என்றும்; அவ்வண்ணமே இந்தியாவிலும் தேசியக்கல்வி வேண்டும் என்றும் மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மாள் முறையிடுகிறூர்கள். இதற்காகவே தாம் மிகவும் பொருட்செலவு செய்து கண்ணிமையானது கண்ணைக்காப்பதுபோல் போற்றி வளர்த்து வந்த தியசாபிகல் எடுகேஷனல் டிரஸ்டு என்ற சங்கத்தில் சேர்ந்த அநேக பள்ளிகளையும் கல்லூரிகளையும் சுதேசக்கல்விக்கழகத்தாருக்குக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறூர். மேலும் ஒருவன் இம்முயற்சியிலும் அரசாங்கத்தாருடைய வருதிக்குட்பட்ட சர்வ கலாசாலைக்குட்பட்ட கலாசாலையிலும் உழைப்பதானல் முற்கூறிய முயற்சியில் எடுக்கும் ஊக்கம் போதாமல் போகும் என்றேதான் ஒருவேளை இந்த தியசாபிகல் எடுகேஷனல் டிரஸ்டுப்பள்ளிக்கூடங்களுக்கு சர்க்கார் உதவிகளை முற்றிலும் விலக்கினூர்கள் போலும்! ஆகையால் சென்ற சிலமாதங்களாக சுதேசியக்கல்விக்கழகத்தார் முயற்சி மிகவும் ஓங்கிவருகிறது.

*
* *

சென்ற டிசம்பர் ஸ்ரீ இறுதியில் கல்கத்தாவில் சில முக்கியமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சுதேச சர்வ கலாசாலைக்கு சான்ஸலர் என்ற உயர்ந்த தலைமையை உலகம் புகழும் ஸர் ரவீந்தரநாத டாகோர் என்ற ஆசியாகண்டத்து ஆஸ்தான கவி வகிப்பதாக ஏற்றுக்கொண்டிருக்கிறூர். நம் சென்னை மாகாணத்துக்கிழச்சிங்கமாகிய டாக்டர் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் அதற்கடுத்த ஸ்தான

மாகிய புரோ சான்ஸ்லர் என்ற வேலையை ஏற்றுக்கொண்டிருக்கிறார். கனம் திவான் பஹதூர் ஜஸ்டிஸ் டி. ஸதாசிவையர் அவர்கள் அடுத்த உத்தரவாதமான வைஸ் சான்ஸலர் வேலையை ஏற்றுக்கொண்டிருக்கிறார் நிர்வாஹ சபைக்கு அக்கிராசனபதி நமது மாதா ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மாள். சுதேசக்கல்வி அபிவிருத்தி சபை யென்ற இம்முயற்சியை கொண்டு செலுத்தும் சபைக்கு அக்கிராசனர் டாக்டர் ஸர். ராஸ்விஹாரிகோஸ் டி. எல்., ஸி. ஐ. இ., என்ற பங்காள வக்கீல் பிரமுகர். மேலும் இந்திய சிரேஷ்டர்களான ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு, லோகமான்ய திலகர், சென்னை சட்டசபை, டில்லி சட்டசபை அங்கத்தினர்கள் பலர் இம் முயற்சியில் சேர்ந்திருக்கிறார்கள். இந்தியர் கல்வி அபிவிருத்தியில் 'தம் வாழ்நாளைச் செலவழித்திருக்கிறவரும் இந்தியா மாதாவினிடத்தில்கொண்ட பக்தியினால் இந்தியன் என்று யாவராலும் கொண்டாடப்படுபவருமான ஸ்ரீமான் ஜி. எஸ். அருண்டேல் மிகவும்உத்திரவாதமான ரிஜிஸ்டிரார் வேலையை ஏற்றிருக்கிறார். ஆகையால் இம்முயற்சி சித்தி பெற்றுவிட்டதென்று தைரியமாய்க்கூறலாம்.

*
* *

ஸ்ரீமான் ஜார்ஜு அருண்டேல் அவர்கள் எழுதுகிறார்: "வருகிற எப்ரல்மீ 8ஆம்தேதி முதல் 15ஆம் தேதியுள்பட 8 நாட்களையும் சுதேசக்கல்வி வாரம் எனக்கொண்டாடவேண்டும். இப்போது முதற்கொண்டே அந்த வாரத்தில் சுதேசக்கல்விக்காக பணம் சேகரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஒருவராகத் தனியே காரியத்தைச் சாதிக்க முயலுதல் போதாது. ஜனங்களுக்கு பிரதிநிதிகளாக அநேகரைச்சேகரித்துக்கொண்டு இப்போது முதல் முயலவேண்டும். சுதேசக்கல்வி வாரத்தில் பஜனையுடன் ஊர்வலம் வரலாம். நகரத்தை பல பாகங்களாகப்பிரித்து ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு ஜதையாகச் சென்று நன்கொடை வசூல் செய்யலாம். அந்தந்த ஊர்களிலுள்ள நாடகக்கம்பேனிகள், ஸர்கஸ் கம்பேனிகளை சுதேசக்கல்விக்காகவென்று ஆட்டம் ஆடச்சொல்லி அந்த தொகையை வசூல் செ

ய்யலாம். இப்பொழுது முதற்கொண்டே இஷ்டப்பட்ட வர்களிடம் நல்ல சாமான்களாக இனும் வாங்கிச் சேகரித்து வைத்து ஒரு பெரிய மண்டபத்தில் அந்த வாரத்தில் அலங் காரமாக அடுக்கிவைத்து பெரிய மனிதர்களைக்கொண்டு ஏலத்தை துவக்கும்படி செய்து ஏலம்போட்டு தொகை வசூல் செய்யலாம். ஒவ்வொருவரும் அந்த வாரத்தில் தங் களுக்கு யுக்தமாகத் தோன்றுகிற ஒரு அவசியமான பான த்தையோ, தினபண்டத்தையோ ஒன்றை தனக்கு வேண் டாம் என்று தீர்மானித்து அதனுல் ஏற்படக்கூடிய லாப த்தை சுதேசக்கல்விக்கென்று கொடுக்கலாம். கடைகளில் சென்று பணம் வசூலிக்க வியாபாரிகள் கமிட்டி யொன்று சேரலாம். உண்டியல பெட்டிகளைக்கொண்டு ஏழைகள் கொடுக்கும் சில்லரைத்தொகைகளை மாணுக்கர்கள் வசூல் செய்யலாம். தினசரி பத்திரிகைகளும் வாராந்தரப்பத்திரி கைகளும அவ்வாரத்தில் சுதேசக்கல்வியைப்புகழ்ந்து பாட ல்களையும் கட்டுரைகளையும் பிரசுரிக்கலாம். சுதேசக்கல்வி வாரத்தை சபலமாக்கச்செய்யும் ஒவ்வொரு ஏற்பாட்டை யும் சம்பளமின்றி விளம்பரம் செய்யலாம். சுதேசக்கல்வி யைப்பற்றிபபேச பெரிய ஸ்தலங்களை ஏற்பாடுசெய்யலாம். வயதிலும் கௌரவத்திலும் தேசாபிமானத்திலும் மிக்கார் அக்கிராசனம் வகிக்கும்படி செய்யலாம். இவ்விதமாக எவ் வளவோ முறைகளில் அந்த வாரத்தில், தூங்கும்போதும் விழித்திருக்கும்போதும் யாவரும் சுதேசக்கலவியையே நினைக்கும்படிக்கும், அதற்கு ஒவ்வொரு இந்தியனும் தன் னுலான பொருளுதவியைச் செய்யும்படிக்கும் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் செய்யவேண்டும்.''

*
* *

சில மாதங்களுக்குமுன் 'கமலா தினம்' என்றதினத்தை நன்கு கொண்டாட எவ்வளவு பெருமுயற்சிகள் நடந்தன. அதை நடத்தியவர்போல் ராஜாங்கத்தாருடைய செல்வா க்கு நமக்கில்லாவிடினும், நம்முடைய "சுதேசக்கல்வி வார" விஷயத்தில் ஜனங்களுடைய நன்மதிப்பும், விசுவாசமும்,

அபிமானமும் இருக்கிறதால் இந்தியா முழுவதும் ஒருங்கே முயன்றால் இப்பெருங்காரியம் மிகவும் சந்தோஷகரமாயும் மங்களகரமாயும், உத்ஸாஹத்துடனும் ஜயமாகும் என்பதில் சந்தேகமில்லை. இதைப்பார்க்கும் ஒவ்வொருவரும் தம்மாலியன்ற முயற்சி செய்வாராக. சென்னை அடையாறு தபால் பெட்டி நிர். 904 உள்ள சுதேசக்கல்வியபிவிருத்தி சபை ரிஜிஸ்டிரார் ஸ்ரீமான அருண்டேல் என்பவருக்கு எழுதினால் வேண்டிய சமாசாரங்களும் அறியலாம்.

இப்பத்திரிகையில் அடிக்கடி அநேக வியாசங்கள் சுதேசக்கல்வியைப்பற்றி வந்திருக்கின்றன. அதன் ஆலசியத்தைப்பற்றியும் இங்கு எடுத்துக்கூறவேண்டுவதில்லை. பற்பல ஊர்களில் நடக்கும் முயற்சிகளைப்பற்றி சுருக்கமாக எமக்கு எழுதினால் நாம் இப்பத்திரிகைகளில் பிரசுரிக்க தயாராக இருக்கிறோம்.

***

“ஜகத்குரு” என்னும் ஒரு மாதாந்தரப் பத்திரிகை திருமீயச்சூரிலிருந்து ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 28உயன்று வெளிவரப்போவதாகவும் அதன் வருஷச்சந்தா 12 அணா மட்டுமென்றும் 395ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திலிருந்து தெரிய வருகிறது. இப்பத்திரிகைக்கு எமது மனமார்ந்த நல்வரவு கூறுகிறோம். யாவரும் எளிதில் சந்தாதாராக இயலும்படி சந்தா மிகவும் குறைச்சலாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் யாவரும் இதை ஆதரிக்கவேண்டும் எனக்கோருகிறோம்.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்,

பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்.)

அத்தியாயம் 27.

அண்டபிண்ட ஒற்றுமை:—தொடர்ச்சி.

நம்முடைய ஸ்தூல சரீரம் இச்சா சரீரம் மானச சரீரம் காரண சரீரம் ஆகிய இவைகள் எவ்விதம் ஒன்றையொன்று ஊடுருவிக் கொண்டு ஓதப்புரோதமா யிருக்கின்றனவென்பதற்கு ஒரு சிறு உதாரணம் சொல்லுகிறேன். ஒரு துணிப்பந்தைத் தண்ணீரில் போட்டு அது நன்றாய் நனைந்து ஊறியபின் அதைக் கையில் எடுத்துக் கொள்ளுங்கள். இப்போது தண்ணீரானது பந்தை ஊடுருவிக் கொண்டு அதை முழுவதும் வியாபித்திருக்கிறது. அப்படி வியாபித்திருக்கும் தண்ணீரின் உருவம் எவ்விதமிருக்குமென்று நீங்கள் யோசித்துப்பார்த்தால் அதுவும் அப்பந்தின் வடிவமாயிருக்குமென்று உங்களுக்குத் தோன்றும். இன்னும் நீங்கள் ரசாயன சாஸ்திரம் கற்றவர்களாயிருப்பீர்களானால் காற்றானது அத்தண்ணீர்ப்பந்தை ஊடுருவிக் கொண்டு பந்துவடிவமாயிருக்கிறதென்றும் அக்காற்றுப் பந்தை ஊடுருவிக்கொண்டு ஆகாயப்பந்து ஒன்றிருப்பதாகவும் அறிவீர்கள். இப்போது உங்கள் கையிலிருக்கும் துணிப்பந்தை ஸ்தூல சரீரமாகவும், தண்ணீர்ப்பந்தை இச்சா சரீரமாகவும், காற்றுப்பந்தை மானசசரீரமாகவும், ஆகாயப் பந்தை காரண சரீரமாகவும் பாவிக்கலாம். இவ்விதம் நான்கு சரீரங்களிருந்தபோதிலும், பந்தாகிய ஒரு சரீரத்தைத்தான் நீங்கள் பார்க்கிறீர்கள்; அப்படியே நம்முடைய நான்கு சரீரங்களும் ஒன்றையொன்று ஊடுருவிக்கொண்டிருக்கின்றன. பந்தானது ஆத்மா, மனது, இல்லாத ஜடப்பொருளாயிருப்பதால் தன் சரீரங்களில் ஒன்றைவிட்டு மற்றொன்றைப் பிரிக்கமுடியாது. நாமோ ஜாக்கிராவஸ்தையிலிருக்கும்போது ஸ்தூலசரீரத்திலிருந்துகொண்டு பல காரியங்களைச் செய்கிறோம். தூங்கும்போது சொப்

பனவஸ்தையில் ஸ்தூலசரீரத்தை விட்டு நழுவி இச்சா சரீரத்தி லிருந்துகொண்டு புவர் லோகத்தில் சஞ்சரிக்கி ரோம். சுஷுப்தியவஸ்தையில் மானச சரீரத்திலிருந்து கொண்டு சுவர்க்கலோகத்தில் சஞ்சரிக்கிறோம். இதற்கு மேற்பட்ட துரியாவஸ்தை யென்பது நம்மில் பெரும்பான் மையோர் அனுபவித்ததில்லை. வெகு சொற்பமான பேர் கள் அதை யனுபவித்து அந்த ஆனந்தத்தை வெளியிட் டிருக்கிறார்கள். இவ்விதம் நாம் ஒரு சரீரத்தைவிட்டு மற் றொரு சரீரத்தில் இருந்து அனுபவிப்பது வாஸ்தவமா யிருந்தாலும், நம்மிஷ்டப்படி பிரக்ஞையுடன் ஒரு சரீரத் தை விட்டு மற்றொரு சரீரத்தில் பிரவேசித்து அதற்கு சம் பந்தமான லோகத்தில் சஞ்சாரம் செய்ய முடியாது. ஆன ல் யோகிகளும் சித்த புருஷர்களும் அவ்விதம் செய்கிறார் கள். நாமும் காலக்கிரமத்தில் அந்த சக்தியை அடை வோம்.

இவ்விதமாகவே நாம் வசிக்கும் இந்த பூலோகத்தை ஊடுருவிக்கொண்டும் அதை முற்றிலும் வியாபித்துக் கொண்டும் புவர் லோகமும் சுவர்க்க லோகமும் மகர் லோக மும் இருக்கின்றன. நம்முடைய சரீரங்கள் போலவே இவைகள் ஈசுவரனுடைய சரீரங்களாம். அவைகள் ஒன்றை யொன்று ஊடுருவிக்கொண்டிருப்பதால் நாம் ஒரு லோகத் திலிருந்து மற்றொரு லோகத்துக்குப் போக வெகுதூரம் செல்ல வேண்டியதில்லை. அவைகள் இங்கேயே இருக்கின் றன. அந்த லோகங்களுக்குப் போவது அவஸ்தாபேத மே யொழிய ஸ்தானபேதமில்லை.

நாமெல்லோரும் பூலோக காரியங்களை ஸ்தூலதேகத் தால் செய்கிறோம். முன் ஏற்பட்ட ஆசைகளையும் எண் ணங்களையும இப்போது செய்கைகளில் அனுபவித்துத் தீர்ப்பதுமன்றி இனி அனுபவிப்பதற்கான புதிய கர்மங் களையும் செய்கிறோம்.

நம்முடைய இச்சா சரீரத்தில் புவர்லோக வேலையைச் செய்கிறோம். அச்சரீரத்தின் மூலமாக அந்த லோகத்தில் சஞ்சரித்து வசிக்கிறோம். அது ஸ்தூலப்பிரகிருதியைவிட அதிக நுட்பமானதாக யிருப்பதோடு மகா அழகான பிரதேசமாயு மிருக்கின்றது. ஆனால் நம்முடைய பஞ்சேந்திரியங்கள் அவ்வுலகத்தில் உபயோகப்பட மாட்டா. ஆதலாலும் ஜாக்கிராவஸ்தையி லிருக்கும்போது சூட்சும இந்திரியங்களை உபயோகப்படுத்துவது நம்மனேகருக்கு முடியாததாதலாலும் நாம் சூட்சும உலக காட்சியையும் நாதத்தையும் அனுபவிக்க விரும்பினால் சூட்சும தேகத்தை ஸ்தூல தேகத்திலிருந்து பிரித்து ஸ்தூலசரீரத்தை பிரக்ஞையற்று மயக்கத்தில் கிடத்திவிட்டு சூட்சும சரீரத்தோடு அவ்வுலகத்துக்குச் செல்ல வேண்டும்.

எண்ணங்களுக்கு இருப்பிடமா யிருக்கிற மானச சரீரமானது மற்ற இரண்டு சரீரங்களைவிட அதிக அழகுள்ளதாகவும் கம்பீரமுள்ளதாகவு மிருக்கின்றது.

சித்த புருஷர்களும் அவர்களுடைய சிஷ்யர்களும் தங்களுக்கு உதவியாயிருந்து வேலைசெய்பவர்களுக்கு ஒருகாரியத்தைச்செய்யும்படி கட்டளையிடவும், அல்லது ஒருவிஷயத்தை அவர்களுக்கு ஞாபகம்மூட்டவும், அதிகதூரம்போக வேண்டியிருக்கும்போதும், தங்களுடைய மானசசரீரத்தை உபயோகப்படுத்துகிறார்கள்.

ஒருவிஷயத்தை நாம் எவ்வளவு வேகமாக மனதில் நினைக்கிறோமோ அவ்வளவுவேகமாக உலகத்தின் ஒருகோடியிலிருந்து மற்றொருகோடிக்குச் செல்லுவதற்கு மானச சரீரம் உபயோகப்படுகிறது.

காரணசரீரம் எல்லாவற்றிலும் மிகவும் அதிகமான அழகுள்ளது. ஆனால் அச்சரீரத்தில் நாம் உலகசஞ்சாரம் செய்கிறதில்லை. அது சுவர்க்கலோகத்தின் மேல்பாகத்திலி

ருக்கிறது. நாம் மூன்று சரீரங்களையும் நழுவவிட்டபிறகு அதாவது அவைகளின் மரணத்துக்குப்பின் மறுபடியும் பூமியில் ஜனனமெடுக்கவேண்டியகாலம் வருமவரை முற்றிலும் ஆனந்தத்துடன் அச்சரீரத்தில் வசிக்கிறோம். அது நம்முடைய பொக்கிஷ வீடு. ஏனெனில் காப்பாற்றிவைக்கப்பட வேண்டியவையாவும் அதில் இருக்கின்றன. அதற்கும் மானஸ சரீரத்துக்கும் ஒரு பாலம் கட்டுவதுதான் இனியெடுக்கும் ஜென்மங்களில் நாம் செய்யவேண்டிய வேலை. இப்பாலத்தைக் கட்டிவிட்டால் நாம் இதற்கு முன் எடுத்திருக்கும் ஜன்மங்களைப்பற்றிய எல்லா விஷயங்களையும் அவைகளில் நமக்கு நேர்ந்தவற்றையும் நாம் அறிவோம். நாம் எவ்வளவு சீக்கிரத்தில் நம்முடைய சரீரங்களை நேர்த்தியானவைகளாகச் செய்து கொள்ளுகிறோமோ அவ்வளவு சீக்கிரத்தில் இப்பாலம் ஏற்படும்.

குறிப்பு:—மேற்சொன்ன பாலமென்பது என்ன? அது எவ்விதம் ஏற்படும்? என்ற விஷயத்தைப்பற்றி விசாரிப்போம். இவ்வத்தியாயத்தின் முதலாவது பாராவின் கடைசியில் "நம்மிஷ்டப்படி பிரக்ஞையுடன் ஒரு சரீரத்தை விட்டு மற்றொரு சரீரத்தில் பிரவேசித்து அதற்கு சம்பந்தமான லோகத்தில் சஞ்சாரம் செய்ய முடியாது. ஆனால் யோகிகளும் சித்த புருஷர்களும் அவ்விதம் செய்கிறார்கள். நாமும் காலக்கிரமத்தில் அந்த சக்தியை அடைவோம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் தூங்கும்போது சொப்பனவஸ்தையுடன் புவர்லோகத்தில் சஞ்சரிக்கிறோம். அப்போது பூலோக விவகாரங்கள் யாவற்றையும் மறந்து விடுகிறோம். அப்பால் சுஷுப்தியவஸ்தையில் சுவர்க்க லோக ஆனந்தத்தை அனுபவிக்கையில் புவர்லோக சொப்பனவஸ்தையை மறந்து விடுகிறோம். இவ்விதமே ஒருவன் இறந்துபோய் புவர்லோகத்திற்குப் போகும்போது பூலோக விஷயங்களையும் அதிலிருந்து சுவர்க்க லோகம் போகும்போது புவர்லோக விஷயங்களையும் மறந்து விடுகிறான். ஆகையால் ஒருவன் உயிருடனிருக்கும்போதும் இறந்தபிற

கும் ஒரு லோகத்திலிருந்து மற்றொரு லோகத்துக்குப் போகையில் மத்தியில் மறதி என்பது நிச்சயமாய் யேற்படு கிறது. இதைத்தான் வைதரணியாறு என்று புராணங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. அந்த மறதியை ஒழிப்பது தான் பாலம் கட்டுகிறதென்று சொல்லப்பட்டிருக்கின்றது. யோக முயற்சியால் இது கைகூடும். அவ்விதம் மறதியை ஒழித்தவர்களுக்கு பூர்வ ஜென்ம விஷயங்களெல்லாம் ஞாபகத்துக்குவரும்.

வி வெங்குசாமி ஐயர்.

புத்தக விமர்சம்

முரசு, பாப்பா பாட்டு, நாட்டுப்பாட்டு, கண்ணன்பாட்டு. இவைகளின் ஆசிரியர் ஸ்ரீ. சுப்பிரமணிய பாரதியார் விலை முறையே 0—0—3, 0—0—3, 0—1—0, 0—4—0, வாகும். சமரஸம், அன்பு, சகோதரபாவம் இவைகளைப் புகட்டும் முதலிரண்டு சிறுபுத்தகங்களும் முறையே 31, 16 பாட்டுகள் அடங்கிய. நம்மாதிருபூமியின் பொலிவையும், பெருமையையும் விளக்கி, யாவருக்கும் தேசபக்தியைப்புகட்டவல்ல கீதங்கள் நிறைந்த மூன்றாம் புத்தகம் தமிழ் மக்கள் யாவராலும் படித்துணர்ந்து பாடயோக்கியதை யுள்ளது. இனியநடையும், கவினுறு சொற்களும், உள்ள முருக்கிடும் ஆர்ந்த எண்ணங்களும் நிறைந்த இப்புத்தகத்தைப் படித்தோர் மிகவும் ஆனந்த மெய்துவார். கண்ணனைத்தோழனாகவும், சேவகனாகவும் தாயாகவும், தந்தையாகவும், சேவகனாகவும், சற்குருவாகவும், குழந்தையாகவும், விளையாட்டுப் பிள்ளையாகவும். காதலனாகவும், காதலியாகவும். ஆண்டவனாகவும், குலதெய்வமாகவும் பாவித்துக்கொண்டாடும் இன்பம் மலிந்த, பக்திநிறைந்த. பாட்டுகளடங்கியது கண்ணன் பாட்டென்ற புத்தகம். இதில் நவரசங்களும் ஆங்காங்கு காணக்கிடக்கின்றன. மனதை உருக்கவல்ல இப்பாடல்களைப் பாடியவருடைய உண்மையான பக்தியையும் மேலான ஞானத்தையும், சொற்சாதுரியத்தையும், நன்கு விளக்கும் இப்புத்தகத்தை யாவரும் வாங்கிப்படித்து ஆனந்தமடைய வேண்டியது மிக்க அவசியம்.

பிரபத்தி வித்யை.

(358-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஸிருஷ்டிக்கிரமத்தின் நியதிப்பிரகாரம் ஒவ்வொருவனும் ஈசுவரனுடைய சங்கல்பத்தைக்கூட எதிர்த்துத் தன்னுடைய ஸ்வ சங்கற்பத்தை உறுதியாய்க் கைக்கொள்ள பாத்தியமுண்டு. அஜ்ஜீவனை பலாத்காரமாய் ஈசுவர சங்கற்பத்துக்கு அடங்கி நடக்கும்படி செய்ய நியாயமில்லை. கடைமுறையில் ஈசுவர சங்கற்பத்துக்கு விரோதமாய் நடப்பது சரியல்லவென்று கண்டுகொள்வான். அதுவரை அவன் இஷ்டப்படி நடக்க பாத்தியமுண்டு. ஆனால் எப்போதாவது ஸ்வசங்கற்பத்தால் தன்னுடை ஹிருதய கமலத்தைத்திறந்தால் ஈசுவரனுடைய கிருபை அவனிடத்தில் பிரவாகமாய்ப் பொழியும். ஈசுவரன் ஜீவனிடத்தில் எதிர்பார்க்கும் நிபந்தனை இது ஒன்றுதான். இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்து ஈசுவரனுடைய கிருபையைப் பெற்றவன் தான் புத்தன். அவனே கிருஸ்து. அவன்தான் மனுஷ்ய விருக்ஷத்தின் அபூர்வமான புஷ்பம்.

பிரபன்னன் என்று அறியக்கூடிய அடையாளங்களெவை? அவன் எங்கு வாசம் செய்வான்? சாதாரணமாய் அவன் என்ன செய்துகொண்டிருப்பான்? அவனுடைய கிருத்தியங்கள் எத்தகையவை? என்ற வினாக்களுக்கு என்ன விடையென்று ஆலோசிப்போம்.

भिद्यते हृदयग्रन्थिः छिद्यन्ते सर्वसंशयाः ।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे ॥

என்ற உபநிஷத்தின் பிரசித்தமான மந்திரத்தில் பிரபன்னனுடைய லக்ஷணங்கள் கூறப்படுகின்றன. அதாவது பராபர வஸ்துவை ஹிருதய குகையில் கண்ட மாத்திரத்தில் ஹிருதய முடிச்சு ரூபமான ஆசாபாசங்கள் பேதித்துப் போகின்றன. ஈசுவரனிருக்கிறானோ இல்லையோ என்றதும், ஈசவரன் விஷயமான மற்ற சகல சம்சயங்களும், நீங்குகின்றன. சகல கர்மங்களும் நாசமடைகின்றன. தான் ஈசுவரனுடன் ஐக்கியம் என்பதை அறிகிறான். அவன் இவ்வுலகில் ஒரு காலையும் சாசுவதத்தில் ஒரு காலையும் வைத்தவனாகிறான்; அவனுடைய பிராரப்தம் முடியும் வரை சரீரத்தை

போஷிக்கவேண்டியவனு யிருக்கிறுன். அதுவும் தன் சகோதரர்களாகிய மனுஷியர்களுக்கு கைங்கரியம் செய்யும் பொருட்டுத் தான். அவனை நோக்கி ஒருவன் அவதூறுன வார்த்தை சொன்னுல் அந்தத் துஷ்ட வார்த்தையானது தன் சரீரத்தை நோக்கிச் சொன்னதாயும் தன்னை, அதாவது ஜீவாத்மாவை, பாதிக்கமாட்டாதென்றும், அறிவான். ஆகையால் அவன் மனவருத்தமடைகிறதில்லை.

शप्यमानस्य यत्पापं शपन्तमधिगच्छति ।

அதாவது சபிக்கப்பட்டவனுடைய பாபம் சபிக்கிறவனை அடைகிறது. ஒருவன் மற்றொருவனைப்பற்றி தூஷணை செய்தாலும், அவமானமான வார்த்தைகளைச் சொன்னுலும், அப்படி தூஷிக்கப்பட்டவன் அல்லது அவமானமடைந்தவனுடைய பாபம் தூஷித்தவனை அல்லது அவமதிப்பவனை அடைகிறது. இது ஈசுவர நியதியில் ஒரு விதி. ஒரு பந்தை சுவற்றைத் தாக்கும்படி எறிந்தால் சுவற்றில் அமைந்திருக்கும் எதிர்க்கிற சக்தியால் அந்தப்பந்து சுவற்றை விட்டு ஓடிவந்து எறிந்தவனைத் தாக்கும். அம்மாதிரியே ஈசுவரனுடன் ஒருமைப்பட்டவனை நோக்கி ஒரு அவதூறுன வார்த்தையைச் சொன்னுல் அது திரும்பி வந்து சொன்னவனையே ஹிம்சிக்கும். என்னெனில், சுத்தாத்மாவான பிரபன்னனுடைய சக்தியானது தன்னுடைய பிராபல்யத்தால் அக்குரூரமான வார்த்தையை எதிர்த்து அவதூறு கூறினவனை நோக்கி இரட்டிப்பு பலத்துடன் திருப்பிவிடுகிறது. அதனுல் அவன் தான் ஹிம்சிக்கப்படுகிறுன். இதையறிந்த பிரபன்னன அபராதம் செய்தவனை யுத்தேசித்து பரிதபிக்கிறுன். ஏன் என்றுல் அப்பாபி தன்னுடைய பாபத்தைச் சுமப்பதுடன் இதரனுடைய பாபத்தையும் சுமக்க நேரிட்டதேயென்று வருத்தமடைகிறுன்.

आत्मद्रुह ममर्यादं मूढमुज्झितसत्पदं
सुतरामनुकम्पेत ।

என்றபடி "இந்தபாபி நல்ல வழியை விட்டு நழுவினுனே, ஈசுவர நியதியை மீறி நடந்தானே, தனக்குத்தான் துரோஹியானுனே, என்று பிரபன்னன் அவனிடம் அதிகமான தயவைக் காட்டுவான்." ஏன் என்றுல், தூஷித்தவனும்

காணும் ஒன்றேஎன்ற உணர்வுதான் காரணம். அம் மஹா புருஷன், அப்பாபியிடத்தில் தன்னையும் தன்னிடத்தில் அப்பாபியையும் பார்க்கிறான். மேலும், தன்னுடைய தோஷங்களை எடுத்துக் காட்டியதால் தனக்குப்பேருபகாரம் செய்ததாய்க் கருதுகிறான். தன்னுடைய தோஷங்களை நிவர்த்திக்க முயற்சி செய்வதற்கு காரணனானான் என்று அவனிடத்தில் நன்றி யறிதலைக்காட்டுகிறான். மேலும், பூர்வ கர்மவசத்தினால் அப்படி அவன் அவதூறு செய்தான் என்று எண்ணுகிறான். இக்காரணங்களால் அந்த உத்தமனுடைய மனது கலங்காமல் நிர்மலமாயிருக்கிறது. தனக்கு தீங்கு செய்ய நினைத்தவனைக் குறித்து பிரதி செய்ய வேண்டுமென்று நினைக்கிறதில்லை.

பிரபன்னனுக்கு மிருத்யுபயமில்லை. மிருத்யுவை பிரியமுள்ள அதிதியைப் போல் பாவிக்கிறான்.

कृतकृत्याः प्रतीक्षन्ते मृत्युं प्रियमिवातिथिं ।

என்றபடி கிருதகிருத்தியர்கள் மிருத்தியுவை பிரியமுள்ள விருந்தாளியைப்போல் எதிர்பார்த்து நிற்கிறார்கள். சுகம் வாந்தாலும் துக்கம்வந்தாலும் இரண்டையும் சமமாய்ப்பார்க்கிறான். ஏன் எனில் நியதியின் சம்பந்தமான கர்மவிதி இன்னதென்று அறிகிறான். இச்சன்மத்தில் பிராரப்தகர்மத்தின் பலனை அனுபவித்தே தீரவேண்டும் என்ற உண்மையை அறிவான்.

न सुखंप्राप्य संहर्षेत् नदुःखं प्राप्य संज्वरेत् ।

அதாவது ஸுகம் வந்தால் விசேஷ சந்தோஷ மடையமாட்டான் துக்கம் வந்தால் மிகவும் வருந்தமாட்டான்.

பிரபன்னனுக்கு ஆத்ம அனாத்மப் பகுத்தறிவுண்டும் ஜீவன் வேறு சரீரம் வேறு என்று அவன் அறிவான். தான் ஆத்மாவென்று அறிவான். சேஷியும், யஜமானனுமான ஈசுவரனுக்கு சேஷனும் கிங்கரனுமான தான் ஜீவகோடிகளுக்கு ஊழியம் செய்யவேண்டுமென்கிற ஆவல் எப்போதும் அவனுக்கு உண்டு.

பிரபன்னன் மனோவாக்குங் காயம் மூன்றையும் பூரணமாய் அடக்கியாளக்கூடியவன், விஷய சுகங்களில் பற்றில்லாதவன். அவனுடைய ஐம்புலன்களும் அவனால் நன்றாக நிக்கிரஹம் செய்யப்பட்டிருக்கின்றன; பழக்கப்பட்ட குதிரைகள் போல் அவன் கையில் அடங்கி நடக்கின்றன. பரம புருஷனாகிற ஈசுவரனிடத்தில் பிரியத்தை வைப்பவன் அற்பமாகிற விஷய சுகங்களில் பற்றுக்கொள்ளமாட்டான். இவையிரண்டும் நேர்விரோதமானவை. பரமாத்மாவிடம் பிரியம் ஏற்படவேண்டுமாயின், தாழ்ந்த விஷய சுகங்களை முற்றிலும் ஒழிக்கவேண்டும். செய்ந்நன்றி மறத்தல் என்ற துர்க்குணம் அவனிடத்தில் இருக்காது. கைங்கரிய மார்க்கத்தை யுபதேசித்த குருவினிடத்தில் எப்போதும் மஹா விசுவாசமும் நன்றியும் பாராட்டுகிறான். பிரபன்னன் வணக்கமுள்ளவன், அகங்காரம், கர்வம் முதலியவைகள் அவனிடம் காணப்படமாட்டா.

அவன் பிரஹ்மக்ஞானிகளை மதித்துக் கௌரவிக்கவேண்டும். திரிகரணங்களாகிய மனோவாக்குக்காயங்களால் உலகத்திற்கு சதாசேவைசெய்துகொண்டிருக்கவேண்டும். ஈசுவரன் தன் லீலையின்பொருட்டுத் தான் சித்தசித் ரூபமாய் அநேகமாக விளங்கவேண்டுமென்றே சங்கற்பித்து அப்படி சித் அசித் ரூபியாய் ஆகி அவைகளின்மூலமாய் ஆநந்தத்தை அநுபவிக்கின்றான். லீலையென்கிற சப்தத்திற்கு சாமானியமாய் வழங்கிவருகிற விளையாடல் என்ற அருத்தமல்ல. தவறாமல் ஒவ்வொரு காலக்கிரமத்தில் விளங்குகிற ஈசுவரனுடைய சுவபாவம் அல்லது நியதிதான் லீலை. மனுஷ்யனுக்கும், கீழ் சிருஷ்டிக்கும் வித்தியாசம் என்னவென்றால் மனுஷ்யனுக்குத் தன்னைத் தானறியக்கூடிய பிரக்ஞை ஒன்றிருப்பதுதான. இந்த பிரக்ஞையைக்கொண்டு ஈசுவரனுடைய லீலையில் உண்டாகிற ஆநந்தத்தை விருத்தி செய்யக்கூடும். அப்பிரக்ஞை இருவகையானது. ஈசுவரனுடைய நியதிக்கு விரோதமாய் நடக்க ஏதுவாகிற பிரக்ஞை ஒன்று. அதற்கு

அனுசரணையாய் நடக்கக்காரணமாகிற பிரக்ஞை மற்றொன்று. ஈசுவரசங்கற்பத்துக்கு விரோதமான பிரக்ஞையுள்ளவனை அவன் விருத்தியடையும்பொருட்டு கர்மசம்பந்தமான நியதிமூலமாய் ஈசுவரன் தண்டிக்கிறார். இவ்விதம் ஈசுவரன் ஒருவிதமான லீலாரசத்தை அனுபவிக்கிறார். ஆனால் ஈசுவரசங்கற்பத்துக்கு ஒத்திருக்கிற ஜீவன் ஒரு திடமான ஆனந்தத்தை அவ்வீசுவரனுக்கு உண்டாக்குகிறான். இன்னும பூர்ணப்பிரக்ஞனான பிரபன்னன் மனமொத்து ஈசுவரசங்கல்பாதீனனாய்ப்போய் ஈசுவரனைத் தன்னிடத்திலறிந்தவனாய் தியாகமும் கைங்கரியமுமே தனக்கு ஜன்மத்தில் முக்கிய உத்தேசமாய் ஈசுவரனுடைய ஆனந்தத்தை மிகவும் விருத்திசெய்கிறான்.

பத்ததசையில் அதாவது முக்ததசைக்குமுன்பு சாஸ்திரங்களில் முறையிடப்பட்டிருக்கிற நிப்திருபமான விதிகளை ஜீவன் அனுசரித்துக்கொண்டு, ஈசுவர சங்கல்பத்துக்கு ஒத்து நடக்கிறான். தன்னைத்தவிர மற்ற மனுஷ்ய வர்க்கத்துக்கு கைங்கரியம் செய்வதுதான் மற்ற யாவற்றையும் காட்டிலும் ஈசுவரனுக்கு அதிகப்பிரியமுள்ளதென்றும் தன்னுயிரின் ஒருபாகமாகிய மனுஷ்யவர்க்கத்தை அலக்ஷ்யம் செய்து, தன்னைமாத்திரம் பத்திரம், புஷ்பம், பலம், தோயம் முதலியவைகளால் பூஜைசெய்வதில் அவ்வீசுவரன் அவ்வளவு ஆநந்தத்தை அடைகிறதில்லையென்றும் தெரிந்துகொள்ளுகிறான். அது எதுபோல் என்றால், அரசகுமாரனைச் சீராட்டுவதினால் அரசனுடைய பிரீதியைச் சம்பாதிப்பது போலவே. இம்மாதிரியான உணர்வினாலேயும் அறிவினாலேயும் ஈசுவரன் தந்தையென்கிற பிரக்ஞையும் ஜீவகோடியில் சகோதரபாவமும் உண்டாகின்றன.

மேலும், பிரபன்னனுக்கு தன்னுடைய சரீரத்திலும், ஆத்மாவிடத்திலும், எவ்விதப்பற்றுமில்லை. ஏனெனில் தன்னுடைய ஜீவனைப் பாதுகாக்கக்கூடியவனான பரமாத்மாவினிடத்தில் தன் ஜீவனைத் தியாகம்செய்துவிட்டான். சரீர

சம்ரக்ஷணையோ, அவனுடைய கர்மானுசாரமாய் நடக்கும், இருவிதப்பற்றும் ஒழிந்தவனுய், மனுஷ்யர்களுடைய கைங்கரியத்துக்காக தன் மனோவாக்குக்காயங்களை தத்தம்செய்து விடுகிறான்.

இனி யெவ்விதமான கைங்கரியம் செய்யவேண்டியதென்பதை விசாரிப்போம் அக்கைங்கரியமானது ஐந்து விதமானது. முதலாவது, வேதாந்தத்தில் ரஹஸ்யக்கிரந்தங்களை வாசிப்பதும், பிறருக்குப் போதிப்பதும். அப்படி நேரில்படிக்கத்தகுந்த மூளையில்லாவிடில் குருக்களிடம் உபதேசங்களைக்கேட்டு, அப்படிக்கேட்டறிந்த உபதேசங்களை தன்னைவிட மூடர்களானவர்களுக்குப் புகட்டுவது, இரண்டாவது கைங்கரியமாகும். மேற்கூறியபடி செய்ய இயலாவிடின், ரிஷிகளாலும், தேவர்களாலும், எங்கெந்த ஆலயங்களில் அவர்களுடைய தேஜஸானது வைக்கப்பட்டு, பின்னும் பக்தர்களால் காப்பாற்றப்பட்டு வருகின்றதோ அந்தந்த ஆலயங்களில் ஊழியம்செய்வது, மூன்றாவது கைங்கரியமாகும். மனுஷ்யனுக்கும், ஈசுவரனுக்கும் உள்ள பந்துத்துவத்தையும் மற்ற ரஹஸ்யங்களையும் காட்டும் பிரணவத்தைத் தியானம்செய்வது நான்காவது கைங்கரியமாகும். உண்மையான பக்தியுடன் ஈசுவரஸேவை பண்ணி தன்னுடைய ஆத்மரக்ஷணையில் புகுவது ஐந்தாவது கைங்கரியம், இவ்விதமாய் ஐந்துவிதமான கைங்கரியங்களைச் செய்யப் புகுபவன் மூவித மனுஷ்யர்களுடைய ஸம்ஸர்க்கத்தைப் பெறுகிறான். அனுகூலன், பிரதிகூலன், அனுபயன் என்ற மூன்று சுவபாவமுள்ளவர்கள் மனுஷ்யர்கள். ஈசுவரநியதிக்கும் சங்கல்பத்துக்கும் ஒத்துநடப்பவன் அனுகூலன்; விரோதமாய்நடப்பவன் பிரதிகூலன், உதாஸீநமாயிருப்பவன் அனுபயன். உதாஸீநன் என்பவன் அனுகூலனுமல்லன் விரோதியுமல்லன். பிரபன்னன் அனுகூலர்களைக் கண்டமாத்திரத்தில் எப்படி ஒருமனிதன் சந்தனம், புஷ்பம், சந்திரிகை, தென்றல், இவைபோன்ற வஸ்துக்களிடத்தில் பிரியப்படு

வானே அப்படி அவர்களிடத்தில் பிரியப்படுவான். இரண்டாவது வகுப்பு மனுஷனை பிரதிகூலனைக் கண்டால் நெருப்பு, பாம்பு, இவைகளைக்கண்டாற்போல விலகுவான். உதாஸீனர்களைக் கண்டால் அவர்களிடம் உதாஸீனமாயிருப்பன். அதாவது அவர்கள் அவனிடம் விரும்பி நெருங்கினல் அவர்களுக்கு ஞானேபதேசம் செய்வான். அப்படி உபேக்ஷையாயிருந்தால் வீணாக ஜன்மத்தைக் கழிக்கிறார்களே என்று பரிதபிக்கிறான்.

(தொடரும்.)

வி. கே. தேசிகாச்சாரி.

புத்தக விமர்சம்.

சந்தானரத்தினம்—சதானந்த சுவாமிகளியற்றிய மலையாளக்கிரந்தத்தைத் தமிழில் காளையார்கோவில் இராமபத்திரசர்மா அவர்கள் மொழிபெயர்த்திருக்கிறார்கள். விலை 14 அணா.

இது மிகவும் உபயோகமுள்ள நூல். புத்திரோத்பத்தி விஷயமாய் என்னஎன்ன சங்கதிகள் தெரியவேண்டுமோ அவைகள் யாவற்றையும் இப்புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆயுர்வேத சாஸ்திரப்படி வைத்தியமும், மந்திரமும், சுகாதார சாஸ்திரமுறைகளும் யாவரும் எளிதில் அறியும்படி எழுதியிருக்கிறது. வைத்தியமுறைகளையும் மாந்திரீகவிஷயங்களையும்பற்றி எம்மால் எழுதமுடியாதபோனாலும், சுகாதாரவிஷயமாய்க் கூறியவை மிகவும் பொருத்தமானவையாய்க் காணப்படுகின்றன. இது யாவரும் வாங்கி வாசிக்கவேண்டியது.

இஹபரஸாதகம் அல்லது 30 மஹாத்மாக்கள் ஞானிகளின் மொழிகள், இயற்றியவர் கா. சு. சேஷகிரி ஐயர். விலை அணா 2. அன்னிபெஸண்டு, இயேசுகிருஸ்து, உபநிஷத், ஔவை. இதுபோன்ற 30 பெரியவர்கள் ஸத்துக்களுடைய உக்திகளைத் தொகுத்து வெளியிட்டிருக்கும் சிறு துண்டுப் புத்தகம் மிகவும் உபயோகமுள்ளது.

(1) **மதமும் ராஜநீதியும்** (2) **சுதேசக்கல்வி**—இவ்விரண்டு விஷயமாயும் இரண்டு வியாசங்களடங்கிய சிறு துண்டுப்பத்திரிகை. பி. எஸ். ராமசுப்பையர் இயற்றியது. விலை அணா 1. சென்னை சுயராஜ்ய பிரசுரச் சழகத்தாரால் வெளியாக்கப்பட்டது. அழகிய நடையில் யெழுதப்பட்ட இவ்விரு வியாசங்களைப்பார்க்க மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

சுதேசக்கல்வி.

(347-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கற்றுவரும்போது மாணவரும் மாணவிகளும் ஆசிரியரின் குடும்பத்தைச்சேர்ந்தவரைப்போல ஏகோபித்து வீட்டுவேலைகளை விரைந்தேற்று நடத்தியும், ஆசிரியருக்குப் பணிவிடைசெய்தும் வந்தனர். தற்காலத்திற்போல ஒவ்வொருவரும் விதித்தசம்பளத்தைக்கொடுத்துக் கற்கவில்லை. படிப்பை அவ்வாசிரியர் விலைச்சரக்காக மதிக்கவேயில்லை. அவ்வாறு அறிவை விலைப்படுத்தி வாணியஞ்செய்வது அத்துணைச்சிறந்ததன்றென அவர் கருதினார். இது நம்மிந்தியாவின் முற்காலவழக்கு. எத்தேசத்திலும் இவ்வருமையான வழக்கத்தைக் காண்பது முடியாது. இவ்வழக்கத்தை மறுபடி நமதுநாட்டில் ஸ்தாபிக்கும்பொருட்டே நமது வங்காளபண்டிதர் ஜெகதீசசந்திரபோஸ் என்பாரும் தாம் நூதனமாக ஏற்படுத்திய ஆராய்ச்சிக் கலாசாலையில் வந்து கற்போரிடம் யாதொரு ஊதியத்தையும் எதிர்பார்க்கக் கூடாதெனவும், அச்சாலையில் நூதனமாகக் கண்டுபிடிக்கப்படும் யந்திரங்களுக்கு சுதந்தரபாத்யதையைப்பெற்றுக் கொண்டு பொருள் குவிப்பது இந்தியர்களுக்கழகல்லவெனவும் ஸமீபத்தில் வெளியிட்டார். ஆதலின் முன்னாளில் கல்வி கற்போர் ஒவ்வொருவரும் இனாமாகவே உண்டியும உடையும் கல்வியும் ஆசிரியரிடம் பெற்றுவந்தனர். பலசமயங்களில் பிள்ளைகள் பக்கலுள்ள நகரங்களிற்சென்று ஆசிரியர்க்கும் தமக்கும் வேண்டிய அன்னத்தை இரந்துபெற்று ஆசிரியரை உண்பித்துத் தாமுமுண்டுவந்தனர். அம்மாணவர் எல்லாம் ஆசிரியரிடங்காட்டிவந்த பக்திவிசுவாசங்களுக்கு அளவேகிடையாது. ஒவ்வொருமாணவனும் தன் காலைக் கடன்களை கழித்துக்கொண்டு ஆசிரியரிடம்

பொழுதொடுசென்று, வழிபடல் முனியான்
குணத்தொடுபழகி, அவன்குறிப் பிற்சார்ந்து
இருவென இருந்து, சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்
சித்திரப்பாவையின் அத்தகவடங்கிச்
செவிவாயாக, நெஞ்சுகளனாக
கேட்டவை கேட்டவை விடாது உளத்தமைத்துப்
போவெனப்போய்த்தான் கற்றவற்றைப்

பற்றிச்சிந்தித்துத் தெளிவடைவான்.

இப்போது அவ்விதமான குருகுலவாஸத்திற்கு இடமே கிடையாது. காலத்தின்கொடுமையால் நல்லாசிரியர்க்கும் ஊதியம்பெறுவது அவசியமாயிற்று. பிரமசரியமில்லை என்பது பேச்சுமட்டிலேயே நின்றுவிட்டது. மாணவர்களைத் தம் மக்களைப்போல் போற்றித் தம்வீட்டில் வைத்துக்கொண்டு பலவழிகளிலும் அவரை வல்லவராக்குவதற்கு ஆசிரியர் பிரியப்பட்டாலும் அது நிறைவேறுவது தற்காலம் எவ்வாறு சாத்தியம்? ஆசிரியர் கவலையற்றுத் தம் கடமையைச் செய்துகொண்டு காலங்கழிப்பதற்குப் பொருட்கவலை அவரிடமிருத்தல் கூடாதன்றோ? ஆகலின் குருகுலவாஸத்திற்கும் வேறுசிந்தனையின்றிக் குருக்கள் தம் தருமத்தையே நடத்திவருவதற்கும் இக்காலமிடங்கொடாது. காலத்திற்கேற்பச் சிறிது மாறுபாடுகளுடன் சிற்சிலவிடங்களில் அக்குருகுலவாஸத்தை இப்போது மீண்டும் ஸ்தாபிக்க முயன்றுவருகிறார்கள். ஹரித்துவாரத்தில் ஆரியஸமாஜத்தார் ஏற்படுத்தியதொன்றும், ரவீந்திரநாத்டாகோர் போல்பூரில் ஏற்படுத்தியதொன்றும் மஹா கியாதியுடன் சின்னாளாக நடைபெற்றுவருவதை நேயர்யாவரும் அறிவர். படிக்கும் சிறுவர்கள் பிரமசரியத்தை வழுவக்கூடாதென்றும், பிள்ளைகள் ஒவ்வொருவரும் குருவின் கண்பார்வையிலேயே காலங்கழித்துவரவேண்டுமென்றும், பள்ளிக்கூடங்கள் கூடியவரை கிராமாந்தரங்களில் இருக்கவேண்டுமென்றும், அவை இயற்கைவனப்பின்மத்தியிலிருந்தால் பிள்ளைகளின்மேலான மனோபாவத்திற்கும் தேகசௌக்கியத்திற்கும் இடந்தருவன வென்றும், ஆசிரியர் தமது அபேட்சைகளை வளரவிடாமல் தடுத்துப் பற்றற்றவாழ்வே பெருவாழ்வெனப் பிள்ளைகள் உணர்ந்துகொள்ளுமாறு தாம் நடத்திக்காட்டுவதே பிள்ளைகளது குணப்பெருக்கிற்கு இன்றியமையாத சாதனமாகுமென்றும், அவ்விரு கலாசாலைகளிலும் நிரூபிக்கப்பட்டுவருகின்றன. இன்னும் பலவிடங்களிலும் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடத்தண்டையிலேயே வாஸஸ்தானம் ஏற்படுத்தி, விடுமுறைநாள் வரும்வரை அவ்விடத்திலேயே ஆசிரியர்மேற்பார்வையில் பிள்ளைகள் இருக்குமாறு சிலகாலாகத்திட்டஞ் செய்துவருகிறார்கள். இது முற்கூறிய குருகுலவாஸத்தைப்

போல அத்தனைச்சிறவாதபோதிலும் வீட்டிற் பெற்றோரது பார்வையிலுமிராது, பள்ளியில் ஆசிரியரது பார்வையிலுமிராது ஆற்றினவெள்ளத்தில் அகப்பட்ட மிதவைபோல அங்குமிங்குமிழுக்கப்பட்டுப் பலவித தீயகுணங்களைத்தேடிக்கொள்ள இடந்தரும் நமது தற்காலக் கல்விமுறையைக் காட்டிலும் அது எவ்வளவோ மேலானதென்றே சொல்லவேண்டும். இதையுணர்ந்த நம்மவரெல்லோரும் இக்காலத்தில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒரு நிவாஸஸ்தானம் பிள்ளைகளுக்காக ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானித்து அதற்குவேண்டிய முயற்சியைத் தேடுகின்றனர். ஆயினும் பெரும்பான்மையாக எல்லாரும் ஏழைகளாகவிருப்பதால் பள்ளிக்குத்தம் பிள்ளைகளையனுப்புவோர் ஒவ்வொருவரும் தம் பிள்ளைகளை 5வயதுமுதல் இத்தகைய நிவாஸஸ்தானத்தில் விட்டுவைப்பது ஸாத்தியமாகாது. ஆகலின் ஒருவரையும் கட்டாயப்படுத்தாமல் எவர் தமக்கு அனுகூலமாகவிருக்குமென்று எண்ணுகிறார்களோ அவர்களைமட்டும் சௌகரியமாக அந்நிவாஸஸ்தானத்தில் இருக்கச்செய்யவேண்டும். அவ்விதஞ்செய்யச் சக்தியற்றவர்களுக்கு அவரது பெற்றோரேனும் உறவினரேனும் நண்பரேனும் வீட்டில் குருவாகவிருந்துகொண்டு ஆசிரியருடன் ஒத்துவேலைசெய்து பள்ளிக்கூடத்திற் கற்பித்தவை எல்லாம் வீட்டில் மறந்துபோகாவண்ணம் காத்துவரவேண்டும்.

இனி நமது சுதேசக் கல்வியின் அடிப்படையாகவுள்ளது மதபோதனை. அது எவ்வாறு நடந்தேறிவருகின்றதென்பதைச் சற்று விசாரிப்போம். பிறதேசங்களில் எல்லாம் மதபோதனை கல்வித்துறைக் கின்றியமையாததாகக் கருதப்படுகின்றது. நம் நாட்டிலோ அது தற்காலம் அடியோடு நசித்துப் போயிற்று. நாம் செய்யுங் கருமங்களெல்லாம் மத சம்பந்தம் பெற்றேயுள்ளன எனவும், அவை நம் ஆத்ம விகாசத்திற்குச் சாதனமானவை எனவும் நாம் பூர்வம் முதல் நம்பிவருகின்றோம். பிறந்ததுமுதல் இறக்கும் வரையிலும், சூரிய உதயம்முதல் அஸ்தமன பர்யந்தமும் நம்மால் செய்யப்படும் கருமங்களெல்லாம் ஒரே நோக்கத்தையே கண் வைத்துள்ளன. அதாவது நம்மை எவ்வாறு

மேலும் மேலும் உயர்த்திக்கொள்வது என்பதே. சில மகான்கள் பிறப்பிறப்புகளுக்குக் காரணமாயுள்ள நமது கருமானுபந்தங்களை எவ்வாறு தொலைத்து முத்திநிலையை யடைவது என்பதையே நோக்கிக் காரியங்களைச் செய்வர். இதை நன்குணர்ந்த நம்மவர் தாம் செய்யும் கருமங்களில் பற்றுவைக்காமல் பரோபகார சிந்தையுடன் பகவதர்ப்பணமாகவே எக்காரியத்தையும் செய்துவருவர்.

இன்னாளாக நம்மவரில் சிலர் மேனாட்டாரது நாகரிகத்தில் ஈடுபட்டு மயங்கி, நம் மதக்கிரந்தங்களில் விதிக்கப்பட்டவைகளை உபேக்ஷித்துத் தள்ளிவருகின்றனர். சுவேச்சை பெருகிவரும் இந்நாளில் ஒருவரது செய்கைகளைக் கட்டுப்படுத்துவது அறிவீனமென வாதிக்கின்றனர். அவ்விதிகளெல்லாம் ஆத்மார்த்தமாக நியமிக்கப்பட்டவை என்பதையும், அவைகளை முற்றிலும் அனுசரிப்பது ஒருவனுக்கு சாத்தியமாகாமற் போயினும், அவைகளைத் தாம் போகும் இருட்டுவழிகளை விளக்கும் தீவர்த்தியாகப் பாவித்து ஒருவன் இவ்வுலகில் நடப்பனேல், அவன் நாளடைவில் மேன்மையை யடைவான் என்பதையும் அவர் உணர்வாராயின் மறந்தும் அவ்விதிகளை அவர் தள்ளுவரோ? நமது இளஞ்சிறார்களும் இவ்விதண்டாவாதிகளைப் பின்பற்றாது காப்பதற்கு இந்நாளில் மதபோதனை அவசியமாகின்றது. முன்னாளில் அதுவே முக்கியமாய்க் கற்பிக்கப்பட்டு வந்தது. நம்மவர் சிறப்பாகக் கொண்டாடும் பழைய நூல்களெல்லாம் மத சம்பந்தமானவைதாம். ஒழுக்க நூல்கள் நம்மிடம் பல விருப்பினும், அவையும் மதநூல்களின் கருத்துக்களையே எடுத்தாளுகின்றன. தற்காலத்தில் பலவேறு மதங்கள் நம் நாட்டில் பயிலுவதாலும் பலமதங்களைச் சேர்ந்த மாணவர்கள் நம் கலாசாலையிற் பயின்று வருவதாலும், மதபோதனை தற்கால நாகரீகத்திற்கு எடுத்ததல்லவெனவும், மதபோதனையைக் கலாசாலையில் கட்டாயப் பாடமாகவைப்பின், ஏற்கனவே நம்நாட்டில் இருக்கும் மதத்துவேஷங்கள் இன்னும் பன்மடங்கு பெருகுமென்றும் சில நாகரிகர் எண்ணுவர். இவ்வாறு சொல்லக்கேட்டு, நமது துரைத்தனத்தாரும்

தாம் கிருஸ்தவரும் அன்னியருமாதலின், மதப்போதனையை எவ்வாறு இந்துக்களுக்கும் பிற மதத்தினர்க்கும் கொடுப்பதென்பதை உணராது, தாம் ஏற்படுத்திய கலாசாலைகளில் மதபோதனையே கூடாதென்று அடித்துவிட்டனர். இவ்வாறு தாம் செய்வதே விக்டோரியா மகாராணியார் நமக்குக் கொடுத்த சாசனத்திற் குறித்தவாறு மத விஷயங்களில் நிர்ப்பக்ஷபாதமாக விருத்தல் என அவர் நம்பினர். இதன் பயனாக அக் கலாசாலைகளிற் படிக்கும் மாணவரெல்லாம் தம் தம் மதக்கொள்கைகள் இவையெனக் கண்டறியச் செயலற்று, கடவுள் ஒருவர் யிருக்கிறார் என்பதையும் மறந்து, மேனாட்டு நிரீசுவரவாதிகளின் வலையிற் சிக்குண்டு, அவர் கூறும் மொழிகளை வேத வாக்கிற்கும் மேலாகவே பாவித்துத் தம்மினுஞ் சிறந்த அறிவுடையோரிலரென அகந்தை கொண்டு அவமே வாணாள் கழித்துவந்தனர். பாதிரிமார் நடத்திவரும் பள்ளியில்மட்டுமே மத போதனை நடந்து வருகிறது. அதற்காக அவர்களுக்கு நாம் நன்றிசெலுத்துவது அவசியம். ஆயினும் அதனால் பயனடைந்தோர் கிருஸ்வராகிய ஒரு வகுப்பினரே. இதர மதப்பிள்ளைகளும் அப்போதனைகளைக் கட்டாயம கேட்கவேண்டுமென்ற நிபந்தனையைப் பாதிரிமார் ஏற்படுத்தி யுள்ளதால், கிருஸ்தவரல்லாத பிள்ளைகளுக்கு அவை நாராசம்போலாகின்றன. தம் மதத்தைப்பற்றிய அவதூறுகளையே பாடசாலைகளிலும், வெளியிற் செய்யும் பிரசங்கங்களிலும் அவர் கேட்கின்றனர். தம் மதத்தைச் சிறிது முணராத அப்பிள்ளைகள் தினந்தோறும் இத் தூஷணங்களைக்கேட்டு, காலடைவில் தம் மதத்தில் பற்றுநீங்கி நிரீசுவரவாதிகளாகின்றனர். சிலர் கிருஸ்தவ மதத்தையும் தழுவுகின்றனர். இந்துப் பாடசாலைகளிலோ மத போதனை என்பதே கிடையாது. இந்துப்பிள்ளைகளுக்கு வீட்டிலும் அப்போதனை கிடையாது. பெற்றோர் அறிந்தாலல்லவோ, அவர் தம் பிள்ளைகளுக்கு அதைப் புகட்டப் போகிறார்கள்.

(தொடரும்.)

ஆர். ரங்காச்சாரி.

ஸ்ரீமான் ஸர் ஜகதீச சந்திர வஸுவின் ஆராய்ச்சிச் சாலை.

உலகத்தில் இந்தியாவின் பெருமையைப் பரவச் செய்த உத்தமருள் முக்கியமானவர் ஸர் ஜகதீச சந்திர வஸு (போஸ்) என்பார். இவர் பங்காளத்தில் சர்க்கார் பிரஸிடென்ஸி காலேஜில் பௌதிக சாஸ்திரியாயிருந்து தற்போது பென்ஷன் பெற்றிருக்கிறார். இவர் தனக்குச் சொந்தமான சொத்துக்களை யெல்லாம் பொது நலத்துக்கென்றே சமர்ப்பணம் செய்த மஹானுபாவராவர். இவருடைய ஆராய்ச்சிச் சாலைக்குப் போய் மிக்கப்பயனும் ஆனந்தமும் எய்துப்படியான பாக்கியத்தைச் சில காலத்துக்கு முன் பெற்றேன். அவ்வாராய்ச்சிச் சாலையில் கண்டவற்றுள் சிலதை இங்குக் கூறினால் நேயர்களுக்கு உபகாரமாயிருக்கலாம் என்று உன்னி இந்தை எழுதலானேன்,

ஆராய்ச்சிச் சாலை யென்றல்லவா கூறினேன்? அதை ஸத்தியத்தை வணங்குவதற்காக இயற்றிய கோவில் என்று ஸ்ரீமான் வஸு அவர்கள் கூறியுள்ளார். நம் தேசத்தியக் கோவில்களில் காணப்படும் சித்திரங்களும், மூர்த்திகளும், வனப்பும் வண்ணமும் வாய்ந்தவைகளா யிருப்பதோடு, உயர்ந்த தத்துவார்த்தங்களைக் கொண்டு அவைகளைக் கவனத்தோடு நோக்கிச் சிந்தனை செய்பவர்களுக்கு உட்கருத்துக்களை வெளியிடுபவைகளாக இருக்கின்றனவென்பது அறிஞர்கள் அறிந்த விஷயம். அங்ஙனமே இக்கோவிலின் வாசலில் சென்றவுடன் ஒருபக்கச் சுவற்றில் ஒரு சிறு பெண்மணி தன் அழகிய கையில் சுடர் விட்டெரியும் ஜோதியான விளக்கைப் பிடித்துக்கொண்டிருப்பது போல் ஒரு வெண்சிலையுருவம் தென்பட்டது. அஞ்ஞான விருளை அகற்றும் ஞான மணி விளக்கை யுருவகப்படுத்தியிருக்கிறதென்று சொல்லவும் வேண்டுமோ?

'இக்கோவிலுக்கு' அலங்காரமாக மாடியின் முன்பக்கத்தின் மத்தியில் இந்திரனுடைய வஜ்ராயுதமும் மாடி வெளிச்சுவரின் பேரில் நெல்லிக்காய்கள் போன்ற உருவங்களும்

தோன்றின. இவைகள் இவ்வாராய்ச்சிச் சாலையின் நோக்கங்களையும், இந்நோக்கங்களை நிறைவேறும்படி செய்யும், உண்மையான இயக்கும் சக்தி என்னவென்றும் சூசிப்பிக்கின்றன. ஆதிகாலத்தில தீமை மேலிட்டு நன்மை நிலைகுலைந்தும், அசுரர் பலமலிந்தும், தேவர்வலி குறைந்தும், மூவுலகுக்கும் இறைவனாகிய தேவேந்திரனுடைய வஜ்ராயுதமானது பழமைப்பட்டு உபயோகமற்றுப் போனபொழுது, தேவகுருவின் வருதிப்படி சக்கிரன் உண்மையும், பரோபகாரமும், சுத்த ஸாத்விக சுபாவமும் உருவெடுத்த போல் விளங்கும் ததீசி முனிவரிடம் சென்று உலகத்தை உய்விக்கும் பொருட்டு அன்னவாது முதுகெலும்பையாசிக்க, அம்மஹான் மனமுவந்து தம்முடலை நீத்து முதுகெலும்பை யீந்ததும் அதைக் கொண்டு இந்திரன் வஜ்ராயுதம் சமைத்து அசுரரை ஜயித்து, உலகத்தை நல்வழியில் செலுத்தியதும் யாவரும் அறிந்ததொல் கதையாகும். இக்கதையில் அசுரரைஜயிக்க இயன்றது இந்திரனது வீரமா அன்றேல் ததீசிமாமுனிவரின் பிரபாவமாவெனில், பிந்தியதென்றே சொல்வீர்கள். இக் "கோவிலா''னது இந்தியாவுக்கும் அம்மூலமாக உலகிற்கும் அஞ்ஞானத்தை விலக்கி ஞானத்தை யூட்டவும், தீமையை விரட்டி நன்மையைப்பயக்கவும் வேண்டுமானால், யாதொரு சுயலாபத்தையும் கருதாது உலகத்தின் க்ஷேமத்தையே நாடி இவ்வாராய்ச்சிச் சாலையில் பயிலும் மாணாக்கர்கள் தங்களது ஆராய்ச்சிகளை நடத்தவேண்டுமென்றும், இக் கோவிலுக்குப் பொருளுதவும் யாவரும் தங்களாலியன்றதைக் கொடுக்கவேண்டுமென்றும், தெள்ளிதின் விளங்கவில்லையா? எவ்வளவு உதவி செய்யப்பட்டது என்றது கேள்வியில்லை. எம்மனோபாவத்தோடு கொடுக்கப்பட்டது என்பது தான் கருதப்படும். ஆகையாலல்லவோ ஸ்ரீமான் வஸு அவர்கள் பம்பாயிலிருந்து சில மாணவிகள் "மாதிரு பூமியின் ஸேவைக்காக''வென்று ஈந்த சிறு தொகையைப் பெரிதும்போற்றி யுவகையுடன் ஏற்றுக் கொண்டார்?

முற்காலத்தில் இவ்விந்தியாவில் புகழுடன் சக்கரவர்த்தியா யாண்ட அசோகன் ஒருக்கால் தன் ராஜ்யத்திலுள்ள

யாவற்றையும், உலகத்தின் பிரயோஜனார்த்தம் கொடுத்து விட்ட பிறகு, கையில் அரை நெல்லிக்காய் மட்டும் மிகுந்து இருந்தது. அப்போழ்தும் "இவ்வரை நெல்லிக்காயையும் யாராவது கேட்கமாட்டார்களா, அதைக் கொடுக்கும் பரமானந்தத்தை நான் அனுபவிக்கலாகாதா?" என்று ஏங்கினான் என்று ஒரு கதையுண்டு. அதை யுருவகப்படுத்தியன்றோ அசோகனுடைய ஆமலகங்களால் இ "கோவில்" அலங்கரிக்கப் பெற்றிருக்கின்றது.

இவ்வாராச்சிச்சாலையில் கண்டுபிடிக்கப்படும் உண்மைகள் ஒருவனுடைய சொந்தப்பிரயோஜனத்துக்காகவும் பதிவுசெய்யப்பட மாட்டாவாம். உலகத்தாருக்கு உபயோகப்படாத உலோபியின் பணத்தைப்போல் ரஹஸியமாய் வைக்கப்படமாட்டா. யார் வேண்டுமானாலும் உபயோகப்படுத்தும்படி பகிரங்கமாக பிரசுரிக்கப்படுமாம். அதற்காகவே ஒரு பெரிய உபந்யாசக் கூடமானது கட்டப்பட்டிருக்கிறது. அதன் விசேஷம் என்னவென்றால் ஏககாலத்தில் 1500 ஜனங்கள் பிரசங்கியார் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும், செய்யும் ஒவ்வொரு நிரூபணத்தையும், கேட்கவும் பார்க்கவும் கூடும்படி அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. ஒருவர் மற்றவரை மறைக்காமல் ஒவ்வொருவரும் சபை நடுவில் நடக்கும் யாவற்றையும் பார்க்கும்படி கட்டடம் நிர்மாணம் செய்திருப்பது மிகவும் மெச்சத்தக்கது. ஸ்ரீமான் வஸு அவர்கள் நிர்மாணம் செய்திருக்கும் யந்திரங்கள் அதிக நுட்பமான உணர்ச்சியுள்ளவையாகையால், சபையிலிருப்போர் கூச்சலிட்டாலும்கூட நிரூபணங்கள் தவறக்கூடும். மேலும் மிகுந்த கவனத்தோடு உற்று நோக்கிக் கேட்டாலன்றி, உபந்யாச நிரூபணங்கள் முற்றும் பயன்பெறுவாகையால், கேட்போர் மனது அலைந்து பலவாறு செல்லாவண்ணம் உபந்யாசகர் உபயோகிக்கும் மேஜைமீது ஒரு சமையத்தில் ஒரு யந்திரம் மட்டும் காணப்படல் வேண்டும். ஆனால் ஓர் உபந்யாசத்தில் பல யந்திரங்கள் உபயோகிக்க வேண்டி வருமாகையால், யாவற்றையும் ஆயத்தம் செய்து

மேஜைக்கு அடியில் ஒரு சிஷ்யன் வைத்துக்கொண்டிருக்கவும், உபந்யாஸகர் வேண்டும்போது ரகஸ்யமாய் வேலை செய்யும் யந்திர மூலமாக உயர்த்தவும் தாழ்த்தவும், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அம்மேஜையின் பக்கத்தில் பித்தளைத் தகட்டில் ஸமுத்திரத்திலிருந்து ஞான சூரியன் கிளம்பவும் அஞ்ஞானவிருள் பறப்பதையும், சூரியனுடைய ஏழு குதிரைகளையும் காண்கிறோம். நவக்கிரஹங்களையும் சூரியனுடைய 12 மூர்த்திகளையும் காண்கிறோம். நம்முடைய பிராசீன கிரந்தங்களில் கூறப்பட்ட இவ்விஷயங்களை முற்றிலும் மூட கற்பனைகள் என்று ஸ்ரீமான் ஜகதீசசந்திர வஸு அவர்கள் தள்ளிவிடவில்லையென்றும், உண்மைகளை அடக்கியுள்ள உருவகங்களாய் பாவித்திருக்கிறார் என்றும் விளங்கவில்லையா? உபந்யாசகர்ஸ்தானத்துக்குநேராக மேல் தளத்தில் விரியும் தாமரஸ புஷ்பத்தையும் அதைச்சுற்றி "தொட்டால் சுருங்கி" என்று சாதாரணமாய்க் காணப்படும் கொடியையும், அதற்கு அடுத்த வட்டத்தில் வேறு ஒரு சிறு செடியையும் சித்திரத்தில் எழுதப் பெற்றிருக்கிறது. விரியும் தாமரஸ புஷ்பத்தை நாம் சாதாரணமாய் எல்லாக் கோவில்களிலும் மேல் தளத்தில் வரையப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். உலகத்தின் விகாஸமுறையின் உருவகமிது. "தொட்டாற் சுருங்கி" என்னும் சாதாரண கொடியானது செடிகொடிகளுக்கும் பிராணிகள் போல உணர்ச்சியுண்டென்பதை சாதாரணர்களுக்கும் விளக்குகிறது. ஸ்ரீமான் வஸு அவர்கள் மற்ற மரம் செடிகொடிகளும் அவ்வாறே உணர்ச்சியுள்ளவை யென்றும், சாதாரணக் கண்களுக்கு இவ்வுணர்ச்சி புலப்படாவிடினும் மிகவும் நுண்ணிய இயந்திரங்களால் இவ்வுணர்ச்சியைக் கண் கூடாய்க் காணலாம் என்று காட்டியிருக்கிறார். மற்றொரு செடியானது "தந்தியடிக்கும் கொடி', அல்லது டேஸ்மோடியம் என்ற பெயரியதாம். அது இயற்கையாகவே கொஞ்சநேரத்திற்கொருதடவை தன் இரண்டு இலைகளையும் சேர்த்துப் பிரிப்பது தந்தியடிப்பது போல இருக்கும். இவ்விரண்டும் புல்

பூண்டு செடி கொடியாகிய தாவரவர்க்கத்தில் வியக்தமாய்க் காணப்படாத உணர்ச்சியையும் செய்கையையும் காட்டுவ தால் அவைகளின் சித்திரங்களை வரைந்திருக்கிறார்கள்.

சபையோர் யாவருடைய கண்ணும் காணும்படி எதிர்ச்சுவரில் ஓர் சிறந்த அழகிய ஓவியம் தீட்டப்பட்டிருக் கிறது. அது பங்காளத்தில் சிறந்த சித்திரீகரான நந்தலால் போஸ் என்பவரால் எழுதப்பட்டதாம். அது எவ்வளவு நேர்த்தியாயிருக்கிறது என்பதை மற்றவர் அறியும்படி சொல்லும் சக்தி எனக்கு இல்லை அதை நேரில் பார்த்தால் தான் அறிய முடியும். அதன் லக்ஷ்யார்த்தத்தையும், சித்தி ரீகரின் கைத்திறனையும் யாவரும் புகழ்ந்திருக்கிறார்கள். இரண்டு உருவங்கள் காணப்படுகின்றன. ஒரு வாலிபன் தீரமான நேரான பார்வையுடன் கையில் தாங்கிய நீண்ட வாளை முன் நீட்டிக்கொண்டு செல்லுகிறான். அவனுக்கு சமீபத்தில் புல்லாங்குழலை இனிமையாய் வாசித்துக்கொண் டு அழகிய ஆடையணிந்த மற்றொருவன் நடந்து செல்லு கிறான். முன்னது ஸத்யம், பின்னது பாவனை இரண்டுமின்றி சாஸ்திர ஆராய்ச்சி பயன்பெறாது என்று உருவகம்.

உயிர் என்பது என்ன என்ற கேள்வி மிகப் பெரியது. அதற்குச் சரியானபடி பதிலளிக்க யான் வல்லவனல்லேன். அல்லது ஒரு பௌதிக சாஸ்திரி முற்றிலும் சரியான பதில ளித்தாலும் சாதாரணர்கள் கிரஹிப்பதும் சிரம சாத்திய மாகும். தன்னின் வெளியினின்றுவரும் தாக்குதல் அல்லது தூண்டுதல்களுக்கு உள்ளினின்றுபதிலுணர்ச்சியுண்டானால் அவ்வுணர்ச்சியைக் காண்பிக்கும் வஸ்துவை உயிர் உள் ளது எனலாம். இது வாஸ்தவமாயின் நாம் சாதாரணமாய் உயிர் அற்றது எனக்கருதும் புல் பூண்டு, மரம் செடி கொடிகளுக்கும், கல் முதலிய ஸ்தாவரங்களுக்கும், தங்கம், வெள்ளி இரும்பு முதலிய லோஹங்களுக்கும் உயிர் உண் டென்றும் ஸ்ரீமான் வஸு அவர்கள் ஸ்தாபித்து உலகத் திற் பிரசித்திபெற்ற தத்வ சாஸ்திரிகளே ஆச்சரியப் படும் படி செய்து விட்டார்கள். லோஹம்கூட சந்தோஷமும், எக்

கமும், அதாவது தாக்குதலுக்கு உடனே பதில் உணர்ச்சி கொடுக்கும் தன்மையையும், சில விஷங்கள் சம்மந்தப் பட்டவுடன் ஏக்கமும், அப்பால் பதில் உணர்ச்சி தாராத சக்காட்டையும் காட்டினவாம். இதைக்கண்டு வியக்காதவர் கிடையாது. ஆனால் உலகத்தில் ஈசுவரனுடைய சர்வ வியாபகத்தையும் அணுவுக்கும் உயிர் உண்டு என்றும் அணுவும் ஈசுவராம்சம் என்றும் அனாதிகாலமாய் உத்கோஷித்துவந்த ரிஷிகளின் மரபில் தோன்றிய எந்த இந்தியன் ரிஷிவாக்கியம் என்று நம்பிக்கைக்குமட்டும் விஷயமான இத் தத்துவமானது யாவரும் நிரூபித்து நிச்சயிக்கக்கூடிய சாஸ்திர நிரூபித உண்மையாய் விட்டதென்று ஆனந்திக்க மாட்டான்?

ஒரு பூண்டு, அல்லது ஒரு செடி சீதோஷ்ண ஸ்திதியால் எங்ஙனம் மாறுபாடடைகிறது? எப்போது தூங்குகிறது? எப்போது விழித்துக்கொள்ளுகிறது? எப்போது பாதி தூக்கமும் பாதி விழிப்புமாயிருக்கிறது? சிவப்பு, வெளிச்சத்தில் வைக்கப்பட்ட செடியின் வளர்ச்சி, உணர்ச்சி யெப்படி? நீல வெளிச்சம் அல்லது மற்ற வெளிச்சத்தில் வைக்கப்பட்ட செடியின் மாறுபாடுகள் என்ன? என்று காட்டக் கூடிய அதிநுண்ணிய யந்திரங்கள் அங்கிருக்கின்றன. நுண்ணிய கருமையான பொடிதடவிய ஒரு சதுரமான தகடு ஒரே வேகத்தோடு மேலேயிருந்து கீழே இறங்கும்படி அமைக்கப் பட்டிருக்கிறது. அத்தகட்டுக்கு சமீபத்தில் ஆனால் அதைத் தொடாதபடி ஒரு ஊசியானது இருக்கிறது. 1 செக்கண்டு அல்லது மற்ற குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை ஒரு தந்திரச் சூழ்ச்சியால் அவ்வூசியானது மேற் கூறிய தகட்டில் தாக்கி மறுபடி தன் பூர்வ ஸ்திதிக்கு வந்து விடுகிறது. அத்தாக்கினால் தகட்டிலிருந்த கரி அழிந்து ஒரு பொட்டுபோல் தெரிகிறது. மேற்கூறிய ஊசிக்கும் பூண்டுக்கும் சம்பந்தம் ஏற்படுத்தப்பட்டால் அப்பூண்டு சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கவாறு அடையும் நுண்ணிய மாறுதல் அல்லது அசைவு மேற்கூறிய ஊசியை ஒரு பக்கம் இழுக்கும். இவ்வூசியானது செடியுடன் சேர்க்கப்படா

விடில் இறங்கும் தகட்டில் நேரான கோட்டில்தான் புள்ளிகள் இடும். ஆனால் செடியுடன் சேர்க்கப்பட்டால் கோடானது நேராக யிருக்காமல் செடியின் அசைவுக்குத் தக்கபடி மாறுதலடையும். அதே காலத்தில் சீதோஷ்ண ஸ்திதியின் மாறுதலைக் காட்டக்கூடிய வேறொரு கோடு போடும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. இவ்வியந்திரத்தால் மாலை 2மணி முதல மறுநாள் விடியும் வரையிலாவது மறுநாள் 2மணி வரையிலாவது அச்செடியானது எவ்விதமான கோடு போடுகிறதென்று அறியலாகும். இவ்விதம் பல நாட்கள் வைத்துப் பார்த்தால், செடி தூங்குவதெப்போது, விழிப்பது எப்போது என்றபல சந்தேகங்கள் தெரியலாகும். இம்மாதிரியே இன்னும் சூக்ஷ்மதரமாக நிர்மாணம் செய்யப்பட்ட யந்திரத்துடன் ஒரு செடியைச்சம்பந்தித்து அச்செடியின் ஒருபாகத்தில் மின்சார யந்திரத்திலிருந்து ஒரு அதிர்ச்சி யேற்படும்படி செய்யலாம். அப்போது ஊசியானது திடீரென்று விலகின கோடு காட்டுவதைப் பார்த்தேன். இதனால் மின்சார அதிர்ச்சியினால் மனிதன் எவ்வாறு உணருகிறானோ அவ்வண்ணம் செடியும் உணருகிறது என்றும் செடியின் ஒரு பாகத்திலிருந்து ஊசியுடன் சம்மந்தித்திருந்த பாகத்துக்கு உணர்ச்சியானது செல்ல எவ்வளவு நேரம்பிடிக்கின்றது என்றும் அறியலாகும். ஈரவெங்காயம் 5நிமிஷத்தில் எவ்வளவுவளருகிறதென்பதை நான் கண்ணால் பார்த்தேன். அது மின்சார அதிர்ச்சியினால் பட்டபாட்டை தகட்டினால்எழுதிக் காட்டியதையும் கண்ணால் பார்த்தேன். இனிமேல் செடிகளுக்கு உணர்ச்சியில்லையென்று யார்சொன்னாலும்நம்பமாட்டேன்.

ஆகையால் தானே ரிஷிகள் ஆகாரத்திற்காகவும், மற்ற அவசியமான உபயோகத்திற்காகவும் செடி கொடிகளை வெட்டவும், இலைகளைப்பறிக்கவும் நேரிடும் சமயத்தில் வனஸ்பதியாகிய தேவதையை பிரார்த்தித்து மன்னிப்புடன் பறித்து வந்தார்கள்! ஆகையாலல்லவோ சிறு குழந்தைகள் அலங்காரத்துக்காக வைக்கப்பட்டிருக்கும் செடிகளை கையால் ஒடிக்கவும், இலைகளைக் கிள்ளவும் கூடாது என்று கற்பிக்கப்படுகிறார்கள்! மழை பெய்தவுடன் செடிகள் ஆனந்த

மாய்ப் பிரகாசிப்பதும் வெயிலால் வாடுவதையும் பார்க்கிகிறேமல்லவா? இயற்கையின் ஆனந்தம் என்பது வீண் கவிகளின் பிதற்றுதல் அல்லவே, சாஸ்திர சம்மதமான உண்மையல்லவா?

மேற்கூறிய யந்திரங்கள் எவ்வளவு நுண்ணியவை யென்று சாதாரணமாய் ஊகிக்கக்கூட முடியாது. ஒரு செகண்டுக்கு ஒரு முறை பொட்டுப்போடும் ஊசியைப்பற்றி முன்னர் பிரஸ்தாபித்தோம். $\frac{1}{1000}$ செகண்டுக்கொருமுறை பொட்டுப்போடும் நுண்ணிய யந்திரத்தை நிர்மாணம் செய்திருக்கிறார். குறுகிய நீளங்களைப்பற்றி பிரஸ்தாபிக்கும் போது பௌதிகசாஸ்திரிகள் மிகவும் சிறியதாகிய வெளிச்சத்தின் அலையின் நீளத்தை அளவுகோலாகக் கொள்வது வழக்கம். அதன் நீளம் ஒரு அங்குலத்தில் 6250ல் ஒரு பாகம். அதிலும் நுண்ணிய நிகள அளவுமட்டும் ஒரு பூண்டு அசைந்தாலும், அதையும் அளக்கக் கூடிய யந்திரமும் இயற்றியிருக்கிறார். இம்மாதிரி யந்திரங்கள் இவருடைய தொழிற் சாலையில் இந்தியரால் செய்ய முடியுமேயொழிய மேனாட்டாரால் இன்னும் செய்ய முடிய வில்லையாம்.

ஒரு விஷத்தைப் பாய்ச்சினால் ஒரு மிருகம் அல்லது மனுஷனுக்கு என்ன மாறுபாடுகள் ஏற்படுமோ அதேமாதிரியான மாறுபாடுகள் செடியிலும் காணப்படுகின்றனவென்று சொன்னேமல்லவா? ஆகையால் இனிமேல் பிராணிகளிடத்தில் பலவிதமான மருந்துகளையும் விஷங்களையும் பிரயோகம்செய்து ஹிம்சிக்காமல் செடிகளில் பிரயோகம் செய்து அதன்பலனை அறிந்துகொண்டு அவ்வாறே மனிதன் பேரிலும் அதேமாறுபாடுகள் ஏற்படும் என்று திண்ணமாய் அறியலாம். இது பெரும் லாபமன்றோ?

நிழலில் காற்றடிக்காதபடி கண்ணாடிக்கூட்டில் பாதுகாத்து வைக்கப்பட்ட ஒரு செடியைப் பார்த்தால் அழகாக பளபளப்பாய்த்தான் காணப்படுகிறது. ஆனால் பரீக்ஷைகள் செய்து பார்த்ததில் நுண்ணிய மேலான உணர்ச்சிகள் அவ்வளவு கிடையாதென்று தெரியவருகிறதாம். ஆனால் சில அதிர்ச்சிகள் உண்டாகும்படி அநேகம் அடிகள் கொடுத்து அச் செடியைத் தாக்கினால் அப்பால் உணர்ச்சிகள் கொஞ்

சம் கொஞ்சமாக உண்டாக ஆரம்பிக்கின்றனவாம். அம்மா திரியே மிகவும் பந்தோபஸ்தாக யாதொரு கஷ்டமுமின்றி போஷித்துக்காப்பாற்றப்பட்ட ஒரு சிறுவனைப் பார்த்தால் மிக அழகாகக் காணப்பட்டாலும் உண்மையான பௌருஷம் முதலிய குணங்கள் அவனிடம் காணப்படுவதில்லை. அதே மனுஷனுக்கு பல கஷ்டங்களும், சோதனைகளும் ஏற்பட்டால் அவனுடைய உண்மையான பலமும் மனுஷத்தனமும் காணப்படத் தலைப்படுகின்றனவல்லவா?

ஆராய்ச்சிச்சாலையின் பின்புறம் சிறு தோட்டமிருக்கின்றது. ஒரு ஆல விருக்ஷத்துக்கு 'குளோரபாரம்' மருந்து கொடுத்து வேருடன் பிடுங்கி வேறிடத்தில் நட்டிருக்கிறார் சிலகாலத்துக்குமுன் இதை ராஜப்பிரதிநிதியவர்கள் வியந்து பேசினார்கள். அம்மரமானது இப்போது நன்றாகத் தழைத்து வளர்ந்திருக்கின்றது. சில செடிகளை நட்டு அவைகளின் வேர்களுக்கு ஊடே மின்சாரத்தைப் பாய்ச்சி அதனால் என்ன மாறுபாடு நேரிடுகிறதென்றும், மின்சாரக் கம்பிகளால் பந்தர் போட்டு அவைகளில் மின்சாரத்தைப் பாய்ச்சி அப்போது அவைகள்பேரில் நீர்த்துளிகள் விழும்படி செய்து அதன் மூலம் ஆகாயத்திலிருக்கும் 'நைட்ரஜனி'லிருந்து 'நைட்ரைட்' என்றபொருளை உண்டுபண்ணி, அதன் பிரயோஜனத்தையும் பரீக்ஷை பண்ணிப் பார்க்கிறார்கள். இன்னும் அநேகமாதிரிகளில் எப்போதும் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டேயிருக்கின்றன.

ஸ்ரீமான் வஸு அவர்கள் எவ்வளவு ஆத்மபரித்தியாகம் செய்திருக்கிறாரோ, அம்மாதிரியே அவருடைய மனைவியார் லேடி போஸும் தம்முடைய ஐவேஜு முழுவதும் இம்முயற்சிக்குக் கொடுத்திருப்பது மெச்சத்தகுந்தது. உண்மையான பரித்தியாகம் எங்கு நிறைந்திருக்கின்றதோ அங்கு ஈசுவரனுடைய கிருபையும் ஜயலக்ஷ்மியும் பிரகாசிக்கும் என்பது உண்மை. ஸ்ரீமான் ஸர் ஜகதீசசந்திர வஸு அவர்கள் இப்போது பம்பாய்போய் பிரசங்கங்கள் செய்து கொண்டிருக்கிறார். இப்போது ஸர் டின்ஷா இடல்ஜி வாசா என்ற பார்ஸி சிரேஷ்டர் பம்பாய்க்காரர்களுடைய உபயமாக இரண்டு லக்ஷ ரூபாய் பெருமான ஒரு பையை ஸர் ஜக

தீசசந்திரவஸு அவர்களுக்குக் கொடுத்ததாகப் பத்திரிகையில் பார்த்து ஆநந்திக்கிறோம்.

பலாபேக்ஷையும் சுயப்பிரயோசனமும் கருதாது உலகத்தின் க்ஷேமத்தின்பொருட்டு உண்மைகளைக் கண்டுபிடித்து யாவருக்கும் பயன்படுமாறு பிரசுரிக்கவேண்டுமென்று ஸ்ரீமான் வஸு அவர்கள் ஸங்கர்ப்பிப்பது கூட அவ்வளவு பெரிதல்ல. அதே உயர் லக்ஷ்யங்கள் கொண்ட சிஷ்யர்கள் வாய்த்திருப்பது மிகவும் சந்தோஷகரமான விஷயம். நான் சில சிஷ்யர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது மேற்கூறிய பலாபேக்ஷையின்மையைப் பற்றி சிலாகித்து இந்தியாவில் தொன்றுதொட்டு வந்த தர்மத்தை கைக்கொண்டதைப்பற்றிப்புகழ்ந்துபேசியபோது ஒருபங்காளி வாலிபர்தேசாபிமானம் மேற்கொண்டு மேற்கூறியபடி வஸு அவர்கள் சுயநலம் கருதாததைப்பற்றி வியசனித்துப்பேசினர். "இவ்விதம் மிகவும்சிரமப்பட்டுக்கண்டுபிடிக்கும் இயந்திரங்களுக்கு 'பேடண்டு'வாங்காதபக்ஷத்தில் ஜர்மனிதேசத்தாரோ அல்லது அமெரிக்கரோ இவ்வியந்திரம் மாதிரி இயற்றி சகல லாபத்தையும் கொண்டுபோய்விடுவான். இந்தியாவானது ஏழ்மைத்தனம் நீங்காது பரிதபிக்கவேண்டியதுதான்" என்று விசனித்தார். அதற்கு வஸு அவர்களின் மாணுக்கர் தம்முடைய ஆசானுடையவிரதத்தின் மேன்மையை எடுத்துக் காட்டினர். "சுயநலம்கொண்டுமேன்மையடைந்த ஒவ்வொரு மஹாகியாதிபெற்றதேசமும் நாகரீகமும் விருத்தாப்பியமடைந்து க்ஷீணித்து இருந்தவிடம் தெரியாமல் போயிருக்க, இந்தியா மட்டும் தான் கண்டுபிடித்த உண்மைகளை உலகத்தாருக்கென்று பரித்தியாகம் செய்து வந்ததினுல்தான் இன்னும் உயிருடன் இருப்பதுடன், இந்தியாவில் வந்துசேரும் சகலருடைய சிறப்புகளையும் தன்மயமாக்கி மிகுந்த சிறப்புடன் விளங்குகிற"தென்றும் எடுத்துக் காட்டினர்.

இவ்வளவு சிறப்புடன் உலகத்தின் க்ஷேமத்துக்காக உழைத்துவரும் இக் 'கோவிலானது' நாளடைவில் மிகவும் சிறப்புற்றுத் தான் கொண்ட மேனேக்கத்தை நிறைவேற்றுமாறு எல்லாம் வல்ல இறைவன் அருளுவாராக.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்.

ஜகத்குரு.

ஓர் அறிவிப்பு.

குமரிகுடகம் திருவேங்கடம் ஆகிய எல்லையுள்ளடங்கும் தமிழ்நாட்டில் உதயதிசை நக்ஷத்திர மகாசங்கத்தின் கிளை சங்கத்தினராகிய சகல கனதனவான்களுக்கும், மேற்படி மகாசங்கத்தின் உத்தேசமாகிய ஜகத்குருவாகும் பரமாசாரியனது வருகையில் நம்பிக்கையும் சிரத்தாபக்தி அபிமானமும் கொண்டோராகிய யாவருக்கும் தெரிவிப்பது யாதெனில்:—

இத்தென்னாட்டில் அவனது திருவரவை எதிர்பார்த்துழைக்கும் யாவருக்கும் ஓர் கருவியாய் அப்போதைக்கப்போது இவ்வுயர்ந்ததோர் பெருங்காரியத்திற்கு உதவும் சகலவித விவரங்களையும், செய்திகளையும் நமது தமிழ்நாடுமுழுவதும் பரவிவரச் செய்வதற்கும், பின்னும் இக்கிளைச் சங்கங்கள் மத்தியில் யாவரிடமும் சென்று தூதுபோய் வந்துகொண்டிருப்பதற்காகவும், தனிப்பத்திரிகையொன்று அவசியமாகுமென்பதை யாவரும் அறிவார்கள். உதயதிசை நக்ஷத்திரசங்கத்தின் அடையாறு ஆபீஸிலும் மற்றும் தேசாந்திரங்களிலும் நடக்கும் நடபடிக்கைகளும் வியவகாரங்களும் இங்கிலீஷ் பாஷையிலேயே நடத்தப்படுகின்றபடியால் அவையெல்லாம் தமிழ்மாத்திரம் அறிந்தோர்க்கு எவ்வாறு பயன்படும்? உதயதிசை நக்ஷத்திரசங்கத்தில் முக்கியஸ்தர்களான நமது பெரியோர்கள் பேசும் பேச்சுக்களும், செய்யுமுபந்நியாசங்களும் எவ்விதம் தமிழ் அறிந்தோர்க்கு உதவும்? இவையாவற்றையும் தெரிந்துகொள்ளாவிடில் எப்படிப் பரமனும் நமது தந்தைவருவதற்காக தமிழுலக மாந்தர்கள் உழைப்பதுஞ் சாத்தியமாகும்?

ஆதலின் இவ்வகைக் காரியங்களை நிறைவேற்றுவதற்கு ஒருசிறு தூண்டுகோலாய் உதவும்படி சிறியதான பத்திரிகை ஒன்றை பாடல்பெற்ற க்ஷேத்திரங்களுள் ஒன்றாகிய இத்திருமீயச்சூரெனும் ஊரிலிருந்து வெளிப்படுத்த உத்தேசித்து

முடித்திருக்கிறோம். தமிழ்நாடு முழுமைக்கும் மாகாணக்காரிய தரிசியின் அதிகாரம் வகிக்கும்படி நியமனம் செய்யப்பட்டிருக்கிறவரான மகா-ள-ள-ஸ்ரீ அ. ரெங்கசுவாமி ஐயர் பி. ஏ., பி. எல்., அவர்களும் இந்த உத்தேசத்தை ஆமோதித்துப் பத்திரிகையைப் பிறப்பிவிக்கும்படி சம்மதம் அளித்திருக்கிறார்கள். ஜகத்குரு என்னும் உயர்ந்த நாமதேயத்துடன் இப்பத்திரிகை பிரதிமாதமும் உதயதிசை நக்ஷத்திர மகாசங்கத்தின் புண்ணியதினங்களில்ஒன்றாகிய 28-ஆம் தேதி யன்று பிரதிமாதமும் இவ்வூரிலேயே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பிரும்மவித்தியா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பட்டுவெளிவந்து உலாவும். இதற்குத் தற்காலம் வருஷம் ஒன்றுக்கு சந்தா அணா 12 ஆக ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. இச்சந்தாத் தொகையை மட்டுங்கொண்டு பத்திரிகையை சீர்பெற நடத்துவது முடியாதென்பது இவ்விஷயத்தில் அனுபவமுள்ள யாவருக்கும் தெரிந்ததுவாதலின், அதற்கெனத் தனியான பண்டு ஒன்று ஏற்படுவதற்காக பிரயத்தனம் செய்யாவிடின், பத்திரிகை நீடித்து நிலைபெறுதல் சாத்தியமாகாது. அதநிமித்தம் சகல அபிமானிகளும் தம்மால் இயன்ற பொருளுதவியைச் செய்து இந்நற்றொண்டை நிலைநிறுத்துவார்களென உறுதியாய் நம்புகிறோம். நன்கொடை எவ்வளவு சுவல்பமே யாயினும், அதையும் அனுப்பி இந்நற்காரியத்திற்குப் பிரயோசனப்படும்படி செய்யவேண்டியது சகல அபிமானிகளின் கடமையாகும்.

இந்நிருபத்தைக் கண்ணுறும் சகல நேயர்களும் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச்சேரும் உத்தேசத்தை ஒரு வாரத்திற்குள் எமக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம். இவ்வூரிலேயே நிலைபெற்றிருக்கிற பிரும்மவித்தியா அச்சுக்கூடத்தில் இப்பத்திரிகையை அச்சிடுவித்து காலந்தவறாமல் வெளியேற்றப்படும்.

A. ரத்தினசபாபதி முதலியார்,
ஸ்டார் குரூப், திருமீயச்சூர், பேரளம், S. I. Ry. தஞ்சாவூர் ஜில்லா.

கடிதம் முதலியவை "R. ஸ்வாமிநாதய்யர், சாந்தி ஆச்ரமம் திருமீயச்சூர், பேரளம் போஸ்ட்" என்ற விலாசத்திற் கெழுதிக் கொள்ளலாம்.

உதயதிசை நக்ஷத்திர சங்கத்தின் கொள்கைகள்.

1 நானிலந் தழைக்கும்வண்ணம் சற்குரு வொருவர்நம்போல்
மானிடச் சட்டைசாத்தி வருவதாய் நம்புகின்றோம்
ஞான நாயகனைக்காணுந் தன்மைய ராகிவாழ்தற்
கானநன்னெறியிப்போதே யடைபநா மாவல்கொண்டோம்.

2. ஆகவே நம்மனத்தி லவனை யெப்போதும்வைத்தே
ஆகுநந் திறமைக்கேற்ப அன்னவன் பெயரால்நாளும்
பாகமார் வேலையெல்லாம் பரிந்துநாம் புரியும்வண்ணம்
ஏகமாய் முயற்சிசெய்வோம் எளிதினி லவனைக்காண.

3. கடமைகட் கிடையூறின்றிக் ஏடுகியே செல்லுநேரத்
திடையிலோர் பாகந்தன்னை யெந்தையின் வருகைக்கேற்ற
திடமுறு பணிவிடைக்காய்ச் சிறிதுமோர் தடையுறாமல்
அடைவுடன் முயற்சிசெய்வோம் அன்னவ ரருளையிட்டே

4. நித்திய வாழ்க்கைதன்னிற் சிறந்தநே மங்களாகப்
பக்தியு மதனைச்சார்ந்த பண்புறு முற்றும்எல்லாச்
சித்தியெல் லாமளிக்கும் ஸௌம்யமும் சேர்ந்திலக்க
உத்தம முயற்சிசெய்வோம் உலகநா யகனைக்காண.

5. அன்னவர்க் காகவன்றி யவன்திருப் பெயராற்செய்யும்
என்னவோர் செயற்குமன்றேல் இன்னருள் வேண்டமெத்
தச்
சின்னவோர் பங்குநேரம் தினந்தொறு தொடங்கவும்பின்
நன்னயமாய்த் தினத்தை முடிக்கவும் நாம்முயல்வோம்.

6. பெருமையெவ் விடத்துற்றாலும் பிரியமா யறிந்துபோற்
றல்
உரிமையாம் கடமையாக வுவந்துநாம் செய்வதன்றி
அருமையா மாத்மஞானத் தான்றவ ரென்றுணர்ந்தால்
ஒருமையா யொத்துழைக்க உண்மையாய் முயலுவோமே.

இ. வி. நாராயண பாகவதர்.

சமாசாரக் குறிப்பு.

ஆலங்குடி:—சென்ற ஜனவரி௴ 25௳ யன்று புதுக்கோட்டை சமஸ்தானத்திலுள்ள புஸ்தகசாலை வாசகசாலை இவைகளின் மகாநாடு ஒன்று கூடிற்று. சமஸ்தானம் திவான் மகா-ள-ள-ஸ்ரீ விஜயரகுநாத துரை ராஜா அவர்கள் B. A. அக்கிராசனம்வகித்தார்கள் கடவுள் வாழ்த்துடன் நடபடிக்கை ஆரம்பிவித்தது. இரண்டு சிறுமிகள் பெண்கல்வி சமஸ்தானத்திலாதரிக்கப்பட்டு வருவதைப் பற்றியும், சில சிறு பையன்கள் பொதுவாகக் கல்வி புஸ்தக சாலை விஷயமாயும் கேட்டோர்கள் ஆனந்திக்கும்படியாகத் தெளிவாகவும் பிழையின்றியும் சம்பாஷணை செய்தார்கள்.

ஆலங்குடி சமஸ்தானப் பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ K. வெங்கடராமையர் அவர்கள் உபசரணை கமிட்டியின் தலைவராக வந்த பிரதிநிதிகளுக்கும், மற்ற கனவான்களுக்கும், நல்வரவு கூறித் தன்னுடைய பிரசங்கத்தை வாசித்தனர். திவானவர்கள் படிப்பின் பிரயோசனத்தைப் பற்றியும் வாசகசாலை புஸ்தக சாலைகளின் பிரயோசனத்தைப்பற்றியும் விவரமாய் எடுத்துக் கூறினார்கள். கட்டாயப்படிப்பு அவசியம் யேற்பாடாகவேணுமென்று மிஸ்டர் K. வெங்கடராமையர் அவர்கள் எடுத்து விவரித்ததை மகாநாட்டின் அக்கிராசனாதிபதி ஒப்புக்கொண்டு ௸ விஷயம் யேற்கனவே தர்பார் அவர்களின் ஆலோசனையிலிருந்து வருவதாகத் தெரிவித்தார். இந்த சமஸ்தானத்தில் பிரதம படிப்பானது இலவசமாகச் செய்யப்பட்டு அநேக வருஷங்களானாலும் ஜனங்கள் அதைத் தெரிந்து தங்கள் பிள்ளைகளின் அபிவிர்த்தியைக் கோரி பள்ளிக்கூடங்களுக்கு சமஸ்தானத்தில் எதிர்பார்த்தபடி அனுப்பாததால் கட்டாயப்படிப்பு யேற்பாடாகவேண்டிய அவசியம் வந்துவிட்டது. கல்வி இலாகாவைச் சேர்ந்த கனவான்களும் கல்வி சிரத்தையுள்ளவர்களுமாக மொத்தத்தில் 200 பேர்கள் வரைக் கூடினார்கள் 13 தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு யாதொரு ஆட்சேபணையன்றியில் ஒப்புக்கொள்ளப்பட்டன. இதை ஒட்டி ஒரு கண்காட்சியும் நடந்தது பல பாடங்களில் பிரசுரமாகும் பத்திரிகைகள் புஸ்தகங்கள் படங்கள் கைத்தொழில் சாமான்கள், இவைகள் கண்காட்சிக் கட்டடத்தில் வைக்கப்பட்டு வந்தவர்களுக்கு விவரித்துச் சொல்லப்பட்டன.

அக்கிராஸனாதிபதி தெளிவாயும் சுருக்கமாயும் இவ்வித மகாநாட்டின் பிரயோசனம், படிப்பின் அபிவிருத்தி இவைகளைப்பற்றியும் எடுத்துரைத்து முடிவுரை கூறினார். பிரதிநிதிகளாக வந்திருந்த இரண்டுகவிகள் வாழ்த்துக்கவி எழுதி வாசித்தனர். ஸ்ரீமான் K. S. இராமசந்திரையர் அக்கிராசனாதிபதியவர்களுக்கும் மற்றவர்களுக்கும்

வந்தன வழிபாடு கூறினர். இந்த மகா நாட்டை சரிவர நடத்துவதில் உபசரணை கமிட்டியின் காரியதரிசி ஸ்ரீமான் S. முத்துக்கிருஷ்ணையர் அவர்கள், ஸ்ரீ K. வெங்கடராமையர் அவர்கள், காதர் மொய்தீன் ராவுத்தர் அவர்கள், M. R. இராமசாமி ஐயர் அவர்கள் மலையையர் அவர்கள், இவர்கள் மிகவும் ஊக்கத்துடன் உழைத்து வந்தார்கள். இவ்விடம் பாங்கரும் பெரிய குடித்தனக்காரருமான மகா-ா-ா-ஸ்ரீ சிதம்பரஞ் செட்டியார் அவர்கள் வந்த அயலூர் பிரதிநிதிகளுக்கும், கனவான்களுக்கும், தன் சொந்தச் செலவில் போஜனத்துக்கு யேற்பாடு செய்து நடத்தினர். இதுவல்லவோ பரோபகாரச் செயல்! மகா-ா-ா-ஸ்ரீ நல்லைய ஆசாரியார் அவர்கள், கண்காட்சிக்குக் கொண்டுவரப்பட்ட புதுக்கோட்டை சமஸ்தான படத்தை வரைந்த ஸ்ரீமான் இராமசந்திர ஐயர் அவர்களுக்கும் ஷை சமஸ்தான சரித்திரத்தைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் தமிழில் எழுதி அனுப்பிய இரண்டு மாணுக்கர்களுக்கும் வெள்ளிப்பதக்கம் அளித்தனர். இப்போக்கொத்த நற்காரியங்களில் தனக்குள்ள சிரத்தையை மேற்கண்ட விதமாகக் காட்டினர். சிறுமிகள் மங்களம் பாட, புதுக்கோட்டை ராஜ வாழ்த்துடன் சபை கலைந்தது.

நாளிது பிப்ரவரி மீ 2-ஆம் தேதியன்று புதுக்கோட்டை பிரஹ்மக்ஞானசபை அங்கத்தினரான ஸ்ரீ டி. வி. இராமசந்திரையர் இவ்விடம் புஸ்தகசாலையின் ஆதரவில் ஜகத்குருவின் அவதாரத்தைப்பற்றிச் சுருக்கமாகவும் கேட்டோர் மனமகிழும்படியாயும் அநேகந் திருஷ்டாந்தங்களுடன் உபந்யாசம் செய்தார். புதுக்கோட்டை நகரவாசியும், ஸமஸ்கிருத வித்வானுமான மகா-ா-ா-ஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரியார் அவர்கள் உபந்யாசத்தை மெச்சிப்பேசி உபந்யசித்தவரை ஆசீர்வதித்து முடிவுரை கூறினர்.

சாஸ்திரியார் அவர்கள் இவ்விடம் சப்மாஜிஸ்திரேட்டு ஸ்ரீ S. பஞ்சாபிகேச சாஸ்திரியார் அவர்களின் பிதா. அவர்கள் ஆலங்குடி வாசிகளின் பேரில் அனுக்கிரகம் கூர்ந்து ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம் என்ற கிரந்தத்தை அனுசரித்து அத்வைத மதத்தைப்பற்றி உபந்யாசம் செய்வதாக ஒப்புக்கொண்டு நேற்று 1-வது சுலோகத்தை விவரித்து கேட்டவர்கள் மனதில் இலகுவாகப்பதியும்படியாக சுலபமான தமிழில் எடுத்துக் கூறினார். இவர்களுக்கு வயசு 60-க்கு மேலானாலும் தனக்குத் தெரிந்த விஷயத்தைப் பிறர்களுக்கு எடுத்துரைப்பதில் எப்பொழுதும் பிரியமுள்ளவர்கள். அவ்விதம் தன் தினசரி வாழ்க்கையில் நடத்தி வருகிறார்கள், இவரல்லவோ புண்ணியசாலி.

சர்வதேள் விஷ சஞ்சீவி

கதறி வந்தவன் களிப்புடன் செல்வான்!"

"விஷம் தீண்டினவன் நிமிஷத்தில் குணமடைவான்!"

குணமில்லாவிட்டால் ரூ. 100 இனும் கொடுக்கப்படும்.

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்ரவம் பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப் பற்றி. நாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டு பிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பிய டாக்டர்களாலும், தமிழ் வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப்பெறுறது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைத் தேள்கொட்டின விடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச் செய்யும். இவ் விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான், பாம்பு, நண்டு தெறுக்கால் முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினாலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குணமடையலாம். மேற் சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில், பணம் வாபஸ் செய்து விடப்படும்.

இந்த சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இவ் விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது. ஏனென்றால், மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷம் தீண்டி விட்டால், அம் மனிதன் எவ்வளவோ அவஸ்தைப் பட்டு அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ் விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை பாக்கட் 1-க்கு 0—8—0
டசன் 1-க்கு 5—0—0

விலாசம்

வி. ஏ. எஸ். பாணி,

3 இருளப்பன் வீதி மதுரை.

பொருத்தமான ஔஷதம்

அதிக மருந்துகளைப்பற்றி விசேஷ விளம்பரம் வரும் அல்லது வாராதென்பது கேள்வியல்ல. வரத்தான் செய்யும். அப்படி வருவதும் காலத்துக்குப் பொருத்திருக்கிறது.

யெதுவாய்க் குணந்தரும் மருந்துகளை ஜனங்கள் வாங்கி உபயோகிப்பார்களா. அல்லது எவ்வித வியாதிக்கும் உடனே குணத்தையும் தேகபலத்தையும் கொடுக்கிற எங்கள் அற்புதமான

ஆதங்கநிக்ரஹமாத்திரை

களை உபயோகித்து நலம் பெறுவார்களாவென்பதுதான் கேள்வி. இந்த ஆ. நி. மாத்திரைகள் மூத்திரேந்திரிய சம்பந்தமான மேக ரோகங்களை வேரோடு களைந்து, மனதுக்கும் தேகத்துக்குமுள்ள பலஹீனத்தை நீக்கி, சுகமான ஜீரணசக்தியைக் கொடுக்கின்றன. இவைகள் ரத்தத்தை சுத்திசெய்து விருத்தியாக்கி நரம்பு ஸ்தானங்களை உறுதிப்படுத்தி புத்தி தீக்ஷண்யத்தைக் கொடுத்து வீரிய ஸ்கலித ரோகங்களை குணப்படுத்துகின்றன. இவைதான் பலத்தைக் கொடுக்க திவ்வியமருந்து.

மருந்து செய்வதில் கெடுதி விளைவிக்கக்கூடியவைகள் ஒன்றும் சேர்க்கப்படவில்லை.

32 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு விலை ரூ 1.

எங்கள் காமசாஸ்திரம் என்னும் புத்தகத்தில் சரீரசம்பந்தமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. கேட்போருக்கு இனமாய்க் கொடுக்கிறோம்.

ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டிய தலசியம்.

ஒரு பெரிய வேலை

எந்த உயர் உத்தியோகத்திலிருந்தாலும் கூலிவேலை செய்தாலும் தங்கம் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்வதுதான் முதல் வேலை யென்பதை யெல்லோருக்கும் ஞாபகப்படுத்துகிறோம்.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர்கோவிந்தஜி,

ஆதங்க நிக்கிரக ஔஷதாலயம்,

45—மேலக்கோபுர வீதி,

மதுரை.